
# ஜாமக்காரன்

WATCHMAN



(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பான ஜாமக்காரன் வாசக குடும்பங்களுக்கு உங்கள் யாவருக்கும் புதுவருட(2015) நல்வாழ்த்துக்களை கூறுகிறேன். இந்த புது வருடத்தில் உங்கள் சிந்தனைக்கு சில ஆலோசனைகளைக்கூற பாரப்படுகிறேன்.

புதுவருடம் தொடங்கினால்போதும் எல்லா நட்சத்திர ஊழியர்கள், ஜெபத்தில் பொய்தீர்க்கதரிசனம் சொல்லும் அனைத்து ஊழியர்களும் இவர்களோடு சபை பாஸ்டர்களும், CSI, லூத்தரன் ஆயர்களும் தனித்தனியாக புதுவருட வாக்குத்தத்த வசனத்தை தயாரித்து அதை அச்சடித்து அதை மக்கள் கையில் கொடுக்க அதை மக்களும் வரிசையாக வந்து பயபக்தியோடு வாங்கி சொல்லும் பரிதாப காட்சியை ஒவ்வொரு புதுவருட ஆரம்பத்திலும் பார்க்கிறோம் அல்லவா! அந்த வாக்குத்தத்த வசனத்தை கர்த்தர் தனக்கு ஜெபத்தில் தனியாக காட்டினார் என்றும், சிலர் கர்த்தர் குறிப்பிட்ட வசனத்தை சொல்ல சொன்னார் என்று சபை ஆராதனையில் கூறி கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்த வசனத்துக்கு எல்லாரும் இரண்டு கைகளும் உயர்த்தி அல்லேலுயா சொல்லுவோம் என்று பாஸ்டர் அறிவிக்க சபை ஜனங்களும் உணர்ச்சிவசப்பட்டு அல்லேலுயா! என்று அவர்கள் சத்தமிடும் அந்த கூக்குரல் சத்தம் ஜாமத்தில் உறங்கிக்கொண்டிருக்கும் ஊரே பயந்து எழும்வண்ணம் துடித்துபோகும் காட்சிகளாகும்.

என்ன பரிதாபம்! படித்த மக்கள்! படிக்காத மக்கள்! அனைவரும் உணர்ச்சிவசப்பட்டு கைகளை தட்டி, உடலை குலுக்கி நடுங்குவதைப்போல தங்களை காண்பிக்கிறார்கள். இது செத்துப்போனவரை தூக்கிக்கொண்டு போகும் பாடைக்குமுன் கிராமமக்கள் தப்பட்டை அடித்து மேளமும் கொட்டி அதற்கேற்ப அவர்கள் கூத்தாடிகூத்தாடி கீழே விழுந்து புரளுவார்களே! அதைப்போன்ற காட்சி இன்று பல பெந்தேகோஸ்தே சபைகளில் காணக் கூடியதாக இருப்பது கிறிஸ்தவசபைகள் சவ ஊர்வலத்தில் சவக்குழியை நோக்கி பிணத்தை தூக்கி சொல்லும் பாமர மக்களைப்போன்று இருக்கிறார்கள் என்பதை விளக்குகிறது.

# பிப்ரவரி 2015

அந்த **வாக்குதத்த** வசன **அட்டையை** அல்லது **வாக்குதத்த** அறிவிப்பை சபை ஆராதனையில்கூறும் நேரத்தில் அரை தூக்கத்தில் அல்லது முழுதூக்கத்தில் சபையில் உட்கார்ந்தவர்களெல்லாம் தூக்க கலக்கம் நீங்கி உற்சாகத்தின் உச்சக்கட்டத்துக்கே போய்விடும் பரிதாபம். இவைகளையெல்லாம் கானும்போது உண்மையான ஆவிக்குரிய விசுவாசியின் உள்ளத்தில் வேதனை கூடுகிறது. நாளாக நாளாக சபைகளில் இந்த ஆவேசம்! சத்தம்! ஆரவாரம் கூடுகிறதே தவிர,குறைவதாக இல்லை. எங்களைப் போன்றோர் **சபை மக்களுக்கும்** வாசகர்களுக்கும் எத்தனை ஆழமாக வேதபாடம் நடத்தினாலும், தெளிவான சத்தியத்தை பத்திரிக்கையில் எழுதினாலும்,புத்தகங்களாக வெளியிட்டாலும் அத்தனையும் வீண்தானோ! என்ற உள்ளசோர்வுடன் மனவேதனையோடு கர்த்தரின்முன் நிற்கிறோம்.

## வருடாந்திர வாக்குதத்த வசனம்:

‘ வருடாவருடம் **வாக்குதத்த வசனம்** என்று கர்த்தர் நமக்கு வசனம் கொடுப்பாரா? அப்படி கர்த்தர் தம் மக்களுக்கு வருடம் ஒரு**வசனம்** என்று கொடுப்பது உண்மையானால் ஒவ்வொரு சபைக்கும் வித்தியாசமான வசனம் கொடுப்பாரா? அல்லது ஒவ்வொரு ஊழியருக்கும் தனிதனி வசனம் காண்ப்பிப்பாரா?.

TVயை ஆன்செய்து கிறிஸ்தவ சேனல்களை கண்டால் ஒவ்வொரு ஊழியரும் கூறுவது என்னவென்றால் இந்த வருடம் டிவியை காண்பவர்களுக்கு **வாக்குத்தத்த வசனமாக** கர்த்தர் உங்களிடம் கூறசொன்னது என்னவென்றால் என்று ஏதாவது ஒரு வசனத்தை கூறி இப்படித்தான் தங்கள் பொய் அறிவிப்பை கர்த்தர் சொன்னதாக மக்களுக்கு அறிவிக்கிறார்கள்.

நாலுமாவடி **மோகன் சி.லாசரஸ்** மாதிரி மக்களை நாலுமாவடிக்கு வரவழைப்பதைப்போல் இவ்வருட **வாக்குத்தத்த வசனமாக** கர்த்தர் எந்த வசனத்தை சொல்லபோகிறார் என்பதை அறிய வேண்டுமானால் பல ஊழியர்கள் அவரவர் இடங்களுக்கு விசுவாசிகளை வரவழைக்கிறார்கள். இந்த ஜனங்களும் அந்த வசனத்தை கர்த்தர்தான் சொல்லப்போகிறார் என்றுநம்பி கூட்டம் கூட்டமாய் பஸ் ஏறி பிரயாணப்பட்டு அங்குசென்று மணிக்கணக்கில் உட்கார்ந்து விட்டுவருகிறார்கள். இந்த வருடத்துக்குரிய வாக்குத்தத்த வசனம் **நான் உன்னில் மகிமைப்படுவேன்** என்று சகோ.மோகன் சி.லாசரஸ் கூறினார்.

இந்த வசனம் 2015ம் வருடத்துக்கு மட்டும்தான். 2016ம் வருடத்துக்கு கர்த்தர் வேறு வசனம் சொல்லுவாராம். காலண்டர் மாற்றுவதுபோல் 2014ம் காலண்டரை தூக்கி எறிந்துவிட்டு 2015 ம் வருட காலண்டர் மாட்டுவதுபோல வருடத்துவக்க ஒரு காலண்டர் மாதிரி வருடத்துக்கு **ஒரு வசனம்** கர்த்தர் கொடுப்பார் என்றால், என்ன முட்டாள்தனம் இது. இதையும் நம்பி ஆட்கள் ஓடுகிறார்களே!

கர்த்தர் மக்களுக்கு வருடத்தின் முதல் நாள் ஒரு வசனம் சொல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அது உண்மையானால் எல்லா ஊழியர்களுக்கும் ஒன்றுபோல ஒரு குறிப்பிட்ட வசனத்தை அறிவிக்கமாட்டாரா?.

**இயேசு அழைக்கிறார்** விசிறிகள் **பால்தினகரன்** மூலமாக கர்த்தர் எங்களுக்கு ஒரு வாக்குத்தத்த வசனம் கொடுத்திருக்கிறார். அதுதான் உண்மையாக இருக்கும். ஆனால் நாலுமாவடிக்காரரிடம் கர்த்தர் சொன்ன வாக்குத்தத்த வசனம் பொய்! என்பார்கள் அல்லது சாது

**செல்வராஜ், வின்சென்ட் செல்வகுமார், சாம் ஜெபதுரை** இன்னும் சில்லரை தீர்க்கதரிசிகளுக்கு கூறிய வாக்குத்தத்த வசனம் யாவும் பொய்யானது என்று இவர்கள் ஒருவருக்கொருவர் கூறி வசன சண்டையை உருவாக்குவார்களே!. எந்த ஊழியர் கூறுவதை **கர்த்தர் சொன்னார்** என்று ஏற்றுக்கொள்வது? திருநெல்வேலியில் ஒருவர் வீடு நிறைய வாக்குத்தத்த வசன அட்டைகள் தொங்குவதை கண்டேன். துணிக்கடையில் புடவையில் தொங்கவிட்டிருக்கும் விலை பட்டியலைப் போல் அந்த வசன அட்டைகள் காணப்பட்டது. **இதில் விளம்பரம் வேறு!** ஒவ்வொரு வாக்குத்தத்த வசன அட்டைகளின் அடியில் அந்தந்த ஊழியர்களின் பெயர், விலாசம், கூடவே பேங்க் அக்கவுண்ட் நெம்பர், சிலவற்றில் சபைகளின் பெயர்கள் என்று அச்சடித்துள்ளனர். என்ன அக்கிரமம் இது! புதுவருடம் **முதல் தேதியில்** இப்படிப்பட்ட பொய் ஊழியர்களிடம் அல்லது சபைகளிடம் மக்கள் அகப்பட்டு திணருகிறார்கள்.

வருடத்தின் ஆரம்பத்திலேயே கிறிஸ்தவசபைமக்கள் வாக்குத்தத்த வசனங்களால் மிகவும் ஏமாற்றப்படுகிறார்கள். இந்த ஏமாற்றம் வருடம் முழுவதும் அவர்களின் வாழ்க்கையிலும் காணப்படும். பிறகு பிள்ளைகள் வளர்ந்தால் சந்ததி சந்ததியாய் தொடர் ஏமாற்றங்கள் இந்த கள்ள ஊழியர்கள் மூலம் ஏற்படுகிறது.

இந்த ஊழியர்களுக்கு வருடத்தின் முதல் நாளே நல்ல காணிக்கை பணவேட்டையும் மலையாய் குவிகிறது. கொள்ளையோ? கொள்ளை!.

இதன் முடிவை இவர்கள் யாரும் அறியார்கள். வாக்குத்தத்த வசனத்தை அந்த வருடத்தின் வசனமாக **கர்த்தர் கொடுத்தார் என்று கூறும் ஊழியர்களும்**, பரலோகம் போகமாட்டார்கள். விடியவிடிய கண்விழித்து வாக்குத்தத்த வசனத்தை கேட்டவர்கள் அல்லது வசன அட்டையை வாங்கியவர்களும் பரலோகம் போகமாட்டார்கள். அந்த வாக்குத்தத்த வசன அட்டையானது யாரையும் பரலோகம் கூட்டி செல்லாது.

இதை ஆசிரியர் குறிப்பில் நான் எழுத காரணம் என் ஜாமக்காரன் வாசகர்களும் வாக்குத்தத்த வசனத்தை வருடந்தோறும் எதிர்பார்த்து நம்புகிறார்களே என்பதை வேதனையோடு கூற வேண்டியது அவசியமாகிறது.

' இந்த 2015ம் ஆண்டு புதிய வருடம் வாசகர்களின் சிந்தனைக்கு நான் ஜாமக்காரன் வாசகர்களுக்கு கூற பாரப்படுவதாவது என்னவென்றால் **உபாகமம் 11:12ல் கர்த்தர் இஸ்ரேல் மக்களுக்கு கூறியதை வாசகர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். வருடத்தின் துவக்க முதல் வருடத்தின் முடிவுமட்டும் எப்போது உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் (உங்கள்மேல்) வைக்கப்பட்டிருக்கும்** என்பதே. இது நான் கூறும் இந்த வருட வாக்குத்தத்த வசனமல்ல, இது தீர்க்கதரிசனமுமல்ல! அதுமட்டுமல்ல எல்லாரும் கூறுவதுபோல் கர்த்தர் சொல்ல சொன்ன வசனம் என்றும் கூறி நானும் அவர்களைப்போல பொய்க்காரன் ஆக விரும்பவில்லை. நீங்கள் வேதத்தில் உள்ள எல்லா வசனத்தையும் வாசித்து தியானிப்பதுபோல் இதையும் நீங்கள் தியானிக்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன். குறிப்பிட்ட இந்த வசனம் இந்த வருடம் முதல் தேதிக்குமட்டும் உரியது அல்ல. வாழ்நாள் முழுவதும் நீங்கள் தியானித்து அதன்படி வாழ்வதற்காக ஆவியானவர் எழுதி வைத்த வசனமாகும். இந்த வசனம் அடங்கிய 11ம் அதிகாரத்தின் முதல் வசனத்திலிருந்து வாசித்தால் அதில் எழுதப்பட்ட கர்த்தரின் (கண்டிஷன்) நிபந்தனைகளை

கவனிக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்கு எப்படியெல்லாம் கீழ்ப்படிந்தால் வருட தொடக்கம் முதல் வருடம் முடிவுவரை கர்த்தருடைய கண்கள் உங்கள் மீதும், உங்கள் குடும்பத்தின் மீதும் உங்கள் ஆலயத்தின்மீதும் இருக்கும் என்பதைத் தான் நாம் கவனிக்கவேண்டும். வாக்கு மாறாதவர் அப்படியே தாம் கூறியபடியே நடந்துக்கொள்வார். ஆனால் நாம் கர்த்தர் கூறிய நிபந்தனைகள் அத்தனைக்கும் கீழ்ப்படிந்தோமா என்பதைத்தான் இந்த நாட்களில் நாம் நம்மை நாமே பரிசோதிக்க வேண்டியது அவசியமாகும். கர்த்தருடைய வாக்குத்தத்தம் கடந்த வருடம், இந்த வருடம் இனி வரும் காலம் முழுவதுக்கும் நமக்கே உரியதாகும். மேலும் வருடத்தின் முதல் தேதிதான் இந்த வசனத்தை தியானிக்க வேண்டும் என்பதில்லை. வாழும் எல்லா நாட்களும் நம்மைநாமே பரிசோதித்து நாம் கர்த்தருக்கு கீழ்படிவோமானால் அதோடு கர்த்தரின் மனதை நாம் துக்கப்படுத்தாது இருந்தால் எல்லா நாளும், எல்லா நிமிடமும் கர்த்தரின் கண்கள் மட்டும் அல்ல. **கர்த்தரே இம்மானுவேலாக நம்மோடு நமக்குள் வாசம் செய்வார்.** யோ 14:24. இது எத்தனை பெரிய ஆசீர்வாதம். இதை உணர்ந்தால் நமக்கு எதைக்குறித்தும் பயம் உண்டாகாது. சந்தோஷத்தோடு வாழலாம்.

உலகம், பணம்,மனைவி, கணவன்,பிள்ளைகள் பதவி, இவைகள் எதுவுமே தராத சமாதானத்தை கர்த்தர் நிச்சயம் உங்களுக்கு தருவார்.

என் வாசகர்கள் அனைவரும் வாக்குத்தத்த ஸ்பெஷலிஸ்ட் ஊழியர்களை நம்பாமல் வசனத்தின்படி வாழக் கற்றுக்கொள்ளுங்கள். வேதத்தில் உள்ள எல்லா வசனங்களும் எல்லா நாட்களுக்கும், எல்லா மாதத்துக்கும் எல்ல வருடத்துக்கும் உரியது என்பதை புரிந்துக் கொள்ளுங்கள்.

## உங்கள் சிந்தனைக்கு மற்றொரு வசனம்:

**பிர 7:14 வாழ்வு காலத்தில் நன்மையை அநுபவித்திரு,**
**தாழ்வு காலத்தில் சிந்தனை செய்.**

**மனிதன் தனக்குப்பின் வருவதொன்றையும் கண்டுபிடியாதபடிக்குத் தேவன் இவ்விரண்டையும் ஒன்றுக்கொன்று எதிரிடையாக வைத்திருக்கிறார்.**

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் மேடு-பள்ளம் உண்டு. நாம் விசுவாசியானாலும், அவிசுவாசியானாலும் உலகத்தில் வாழும் நாட்களில் மரணம், வியாதி, வறுமை, பிரச்சனை ஆகியவைகளை நாம் யாவரும் சந்தித்தேயாக வேண்டும்.

ஆனால் மனம்திரும்புதலின்(இரட்சிப்பின்) அனுபவத்தை பெற்று இயேசுகிறிஸ்துவை நம் உள்ளத்தில் வரவழைத்துவிட்டால் மேலே கர்த்தர் ஏன் இதை எனக்கு அனுமதித்தார் என்று கேள்வி கேட்காமல் பிரச்சனைகளை தாங்கவும்,சகிக்கவும் முடியும். மட்டுமல்ல, பிரச்சனைகளின் மத்தியில் தேவனைத் துதிக்கவும் முடியும்.

ஆனால் மனந்திரும்புதலின் அனுபவம் இல்லாதவர்களே பிரச்சனைகளை கண்டு சோர்ந்து போய், கடவுளின் மீது வெறுப்பு கொள்வார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வேதம் வாசிக்க மனம் வராது, ஜெபிக்க மனம்வராது. சிலர் வாழ்க்கையையே வெறுத்து விடுவார்கள்.

அதனால்தான் ஞானி மூலம் ஆவியானவர் வாழ்வு காலத்தில் கிடைக்கும் நன்மைகளை சந்தோஷத்தோடும், ஸ்தோத்திரத்துடனும் அனுபவித்து மகிழ சொல்லுகிறார். இந்த வாழ்வு நீண்டு போகாது. திடீரென்று வாழ்க்கையில் தாழ்வு உண்டாகும். வியாபாரத்தில் லாபம் கிடைக்காது.

ஜெபத்தில் எல்லா கதவுகளும், மூடப்பட்ட நிலை காணவேண்டியிருக்கும். கர்த்தரிடமிருந்து ஒரு பதிலும் வராது. உன் வீட்டார் உனக்கு சத்துருவாக மாறுவார்கள், கை கூடிவரும் பல காரியங்கள் கடைசி நேரத்தில் தோல்வியாக நிராசையாக மாறும். இந்த தாழ்வு காலங்களில் கர்த்தருடைய பிள்ளைகள் தங்களை பரிசோதிக்க இந்த நாட்களை பயன்படுத்திக்கொள்ளவேண்டும். காரணம் **தேவன் மனப்பூர்வமாய் அல்லது நாம் வேதனைப்பட்டு துடிக்கவேண்டும்** என்று எந்த பிரச்சனைகளையும், துன்பங்களையும் நமக்கு அனுமதிப்பதில்லை. புல 3:33. நம் தேவன் மிகவும் நல்லவர். தாழ்வுகாலங்களில் நாம் கர்த்தரை எந்தெந்த விதங்களில் வேதனைப்படுத்தி யிருக்கிறோம், எந்த வசனத்துக்கு நாம் கீழ்ப்படியாமலிருக்கிறோம் என்பதை ஆராய்ந்து பார்க்க நாம் தாழ்வுற்ற காலம் மிகவும் பிரயோஜனமாக இருக்கும். நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது அதில் நான் நிறைய பாடங்களைக் கற்றுக்கொண்டேன் என்று சங்கீதக்காரன் தன் அனுபவத்தை சங்கீதத்தில் பதிவு செய்திருக்கிறார். ஆகவே மேலே குறிப்பிட்ட வசனத்தின்படி தாழ்வு காலத்தில் முறுமுறுக்காமல் **சிந்தனை செய்வோம்!.**

அந்த வசனத்தில் அடுத்த வார்த்தை மனிதன் தனக்கு பின்வருவதொன்றையும் அறியான் என்று எழுதியிருக்கிறது. எந்த மனிதனுக்கும் பிற்காலத்தில் நம் வாழ்க்கையில் நம் வியாபாரத்தில், நம் திருமண வாழ்க்கையில் நாம் விரும்பின வேலையில் அல்லது பதவியில் என்னவெல்லாம் நடக்க போகிறது என்ன மாற்றங்கள் வீட்டில் நடக்கப்போகிறது. வீட்டில் யார் மாமியார், யாருக்கு என்ன வியாதி வரும் நம் பிள்ளைகளுக்கு என்ன நேரப்போகிறது இவை ஒன்றும் தெரியாது. பிற்காலத்தையும், நமக்கு நடக்க போவதையும் குறித்து முக்காலத்தையும் அறிந்த ஒரே ஒருவர் உண்டென்றால் அது நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மட்டுமே. ஆகவே இயேசுவை நம்பினவர்கள் எந்த தாழ்வை குறித்தும் தோல்வியை குறித்தும் கவலைப்படமாட்டார்கள். இந்த பிரச்னையில் நான் படிக்க வேண்டிய பாடம் என்ன? நான் எதை சரி செய்யவேண்டும். யாரிடம் ஒப்புரவானால் தேவன் சந்தோஷப்படுவார் என்பதை தான் கர்த்தரை நேசிப்பவர்கள் யோசிப்பார்கள்.

வாசகர்கள் யாவரும் என்னையும் சேர்த்து நம் வாழ்க்கையில் உயர்வு,தாழ்வு எல்லாவற்றையும் சந்திக்க வேண்டியிருக்கும். கர்த்தரை உறுதியாக பற்றிக்கொள்வோம்.

எப்படி வாழ்ந்தால் நம் கர்த்தர் பிரியப்படுவார் என்பதை மட்டும் அறியமுற்பட்டால் போதும். யாரும் நமக்கு உபதேசிக்கவேண்டாம். தாவீது கூறியபடி **கர்த்தாவே உம்மை பிரியப்படுத்த என்னை போதியும்.** சங் 143:10என்று கேட்டு உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு அடியும் எடுத்து வையுங்கள். ' **பின் நாட்களில்** உனக்கு நன்மை செய்யும் பொருட்டு இப்போது உன் நிலைமையை மற்றவர்களுக்கு முன் தாழ்த்தியிருக்கலாம் அல்லது மற்றவர்கள் உன்னை அலட்சியம்படுத்தும் நிலையில் நீ கூனி குறுகிபோகும் நிலைக்கு இப்போது நீ தள்ளப்பட்டிருக்கலாம். பிற்காலத்தை அறிந்தவர் கர்த்தர் ஒருவரே. அதனால்தான் **பின்நாட்களில் உனக்கு நன்மை செய்யும் பொருட்டு உன்னை சிறுமைப்படுத்தி உன்னை சோதிக்க (உபா 8:15)அனுமதித்திருக்கலாம்.** வேதம் கூறுகிறது. **கர்த்தர் மனபூர்வமாய் மனுபுத்திரைச் சிறுமையாக்கி சஞ்சலப்படுத்துகிறதில்லை.** புல 3:33 என்று எழுதியுள்ளது. ஆகவே யாரும் எதைக்குறித்தும் குறிப்பாக இப்போதுள்ள கஷ்டங்களைக்குறித்து சோர்ந்து போகவேண்டாம். **எல்லாவற்றிற்க்கும் ஒரு முடிவு உண்டு. அது நீண்டுபோகாது.** நீதி 23:18. வசனத்தில் பெலப்படுவோம். நம் கர்த்தர் மிகவும், நல்லவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவர்.

# இவ்வருட தீர்க்கதரிசனம்:

மேலும் எல்லா டிவி ஊழியர்களும், **இவ்வருட தீர்க்கதரிசனம்** என்று கூற ஆரம்பித்து விட்டார்கள். **பால்தினகரன், மோகன் சி.லாசரஸ்ஸின்** மூவர் அணிகள் இவர்கள் யாவரும் இவர்களோடு இன்னும் சில சில்லறை தீர்க்கதரிசி ஊழியர்களும் வருடாந்திர தீர்க்கதரிசனம் கூற ஆரம்பித்துவிட்டனர். இவர்கள் இந்தியாவைக்குறித்துமட்டும் அல்ல. ஒவ்வொரு உலக நாட்டைக்குறித்தும் தீர்க்கதரிசனத்தை பேப்பரில் எழுதி வைத்து TVயில் **செய்தி வாசிப்பவர்களைப் போல(TV நியூஸ் ரீடர்களைப்போல)** வாசிக்க தொடங்கிவிட்டனர்.

‘ மோகன் சி.லாசரஸ் பேப்பர் கையில் வைத்துக்கொண்டு திக்கித்திணறி TVயில் தீர்க்கதரிசனங்களை ஒன்றன்பின் ஒன்றாய் வாசிப்பதை நானே பார்த்தேன். ஜப்பானுக்கு தீர்க்கதரிசனம்சொன்ன இவர்கள் எல்லாரும் கடந்த சில மாதங்களுக்குமுன் இந்தியாவில் **சட்டீஸ்கர் மாநிலத்தில்** மழையால் நதிநீர் பெருகி பல கிராமங்கள் மூழ்கி ஆயிரக்கணக்கில் மக்கள் மடிந்ததையும், **காஷ்மீரில் வரலாறு** காணாத மழையையும் அதன் காரணமாக பல வாரங்கள் எந்த போக்குவரத்தும் இல்லாமல்போனதால் ஆகார பொட்டலங்களை ஹெலிகாப்டர் மூலமாககூட மக்கள் கைகளில் கிடைக்கதக்கதாக சாப்பாட்டு பொட்டலம், குடிநீர், ரொட்டி எதையும் வீசமுடியாமல் கிராமம் முழுவதும் பல நாட்கள் வெள்ளத்தால் முழ்கியிருந்ததே, அதன் அழிவையும் மக்கள் குடும்பம் குடும்பமாக வெள்ளத்தில் அடித்துசென்ற மரண செய்திகளையும் இந்த **கள்ளதீர்க்கதரிசிகளுக்கு ஏன் கர்த்தர் காட்டவில்லை?.** இப்படிப்பட்ட கேள்வியை மக்கள் உள்ளத்தில் எழாதா? யோசித்துப்பாருங்கள்!.

‘ **பால்தினகரனோ, மோகன் சி.லாசரஸோ, சாதுசெல்வராஜ், வின்சென்ட்செல்வகுமார்** ஆகியவர்கள் அல்லது வேறு யாராவது தமிழ்நாட்டின் ஒரு ஊழியக்காரராவது நதி பெருக்கினால் இந்தியாவில் உண்டான பேரழிவை இதுவரை ஏன் கூறவில்லை? **அமெரிக்கா, ஜப்பான், கொரியா** போன்ற நாடுகளின் விவரங்களை தினசரி செய்திதாள்களில் இவர்கள் வாசித்து அதையே தீர்க்கதரிசனம் என்று கூறி மக்களை இன்னும் எவ்வளவுகாலம் ஏமாற்றுவார்கள்?. இதற்கு மேலும் இவர்களை **தீர்க்கதரிசிகள்** என்று நம்பும் ஆட்கள் உண்டானால் பொய் சொல்லும் இந்த ஊழியர்களுக்கு என்ன தண்டனை கிடைக்குமோ? அந்த தண்டனை இவர்களுக்கு உதவி செய்பவர்களுக்கும், இவர்களை நம்புபவர்களுக்கும் உண்டாகும் என்பது நிச்சயம்!. இப்படி நான் எழுதுவதுதினால் இவர்கள் யாராவது திருந்துவார்கள் என்று நினைக்கிறீர்களா? இவர்களும் திருந்தமாட்டார்கள். இவர்களை நம்புகிறவர்களும் திருந்தமாட்டார்கள். வருடாவருடம் ஏமார்ந்து கொண்டுதான் இருப்பார்கள். **வருடா வருடம் இவர்களின் வாக்குத்தத்த வசனம் தொடரும்.....**

**வருடா வருடம் இவர்களின் புதுவருட தீர்க்கதரிசனமும் தொடரும்....**

‘ ஜாமக்காரன் வாசககுடும்பத்துக்காக நாங்கள் ஜெபித்தோம். பலருக்கு கர்த்தர் வாசகர்களின் ஆவிக்குரிய தீர்மானத்தின் அடிப்படையிலும் வசனத்துக்கு கீழ்ப்படிந்தாலும் அற்புத சுகத்தை அவர்களுக்கு கர்த்தர் அளித்ததை சாட்சி கடிதங்களின் மூலம் அறிந்தேன். கடிதம் எழுதி அறிவித்தவர்களுக்காகவும் தேவன் அவர்களுக்கு கொடுத்த சுகத்துக்காகவும், அவர்கள் குடும்பத்தில் கர்த்தர் செய்த அற்புதங்களுக்காகவும் தேவனை துதித்தோம். **கர்த்தரின் வருகையில்** நாம் ஒருவரை ஒருவர் சந்திக்கும்வரை தேவகிருபையும், சமாதானமும் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

கர்த்தரின் உன்னத பணியில்: ✍ **டாக்டர்.புஷ்பராஜ்**

# காவி படைகளின் கையில்



# இந்தியா



## (பயந்தது நடக்க ஆரம்பித்துவிட்டது)

திரு.**மோடி** அவர்களை காண்பித்து BJP கட்சி மிருக பெலத்தோடு இந்திய ஆட்சியை பிடித்துவிட்டது.

❖ **இஸ்லாமியர்** பெரும்பான்மையாக வாழும் இந்தியாவின் தலை போன்ற மாநிலமாகிய **காஷ்மீரிலேயே** BJP என்ற **காவி படை** காலூன்றிவிட்டது. குஜராத்தில் திரு.**மோடி** அரசாங்கத்தில்தான் மிக அதிகமான இஸ்லாமியர் கொல்லப்பட்டார்கள். **பாபர் மசூதியை BJP,VHP,RSS,பஜ்ரங்தள்** போன்ற **காவி** தீவிரவாதிகளால் இடிக்கப்பட்ட நாளிலிருந்து இஸ்லாமியர் மிகவும் கொலைவெறியுடன் பார்த்த குறிப்பிட்ட BJP கட்சியை, அதே **இஸ்லாமியர்கள்தான்** ஓட்டுபோட்டு இன்று ஜெயிக்க வைத்துள்ளார்கள். காரணம் இதுநாள் வரை காஷ்மீரில் ஆட்சி நடத்திய இஸ்லாமியர்களின் கட்சி அந்த காஷ்மீர் மாநில முன்னேற்றத்திற்கு ஒன்றும் செய்யவில்லை என்ற ஆதங்கம் காரணமாக சிறந்த நிர்வாகி என்ற பெயர் வாங்கிய திரு.**மோடி** அவர்கள் பிரதமரானால் நம் மாநில முன்னேற்றத்துக்கு உதவுவார் என்ற நம்பிக்கையின் காரணமாக முஸ்லீம் மக்கள் திரு.மோடியின் கட்சியான BJPக்கு ஒட்டளித்து ஜெயிக்க வைத்தனர். ஆனால் திரு.மோடி(BJP) அவர்கள் ஆட்சி பொருப்பேற்று பாரத பிரதமராக ஆட்சி தொடங்கியவுடனே, கட்டவிழ்த்த காசுமூட்டைகளைப்போல் **RSS,BJP, VHP, பஜ்ரங்தள்** ஆகிய இயக்கங்களில் உள்ளவர்கள் தங்களுக்கு கிடைத்த இந்த 5 வருட BJP ஆட்சியின் காலத்துக்குள் இந்தியாவை ஒரு **இந்து நாடாக** மாற்றிவிடவேண்டும் என்று மிக ஆழமாக திட்டமிட்டு மற்ற மதங்களில் உள்ளவர்களை தாய் மதமான **இந்து மதத்துக்கு** திரும்ப கொண்டு வருகிறோம் என்று கூறி இவர்களே ஆதிவாசிகளுக்கு காசு கொடுத்து **மதமாற்றத்தை** நிறைவேற்ற ஆரம்பித்துவிட்டனர்.

❖ **இஸ்லாமியர் - இந்து மதத்துக்கு மாறினால் ஒரு நபருக்கு 6 லட்சம்,**

❖ **கிறிஸ்தவர் - இந்து மதத்துக்கு மாறினால் ஒரு நபருக்கு 5 லட்சம்** என்று மதமாற்றத்துக்கு பெரும் தொகை கொடுக்கப்படுகிறது என்றால் எத்தனை கோடிகள் இந்த மத மாற்ற திட்டத்துக்காக இவ்வளவு பணத்தை இவர்கள் இரகசியமாக ஆங்காங்கு சேமித்து வைத்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. முதல் மதமாற்றமாக வடஇந்தியாவில் உள்ள **ஆதிவாசிகளை** குறிவைத்து இவர்கள் செயல்பட ஆரம்பித்துவிட்டனர். ஆதிவாசிகளை மதமாற்ற பெருந்தொகை இவர்களுக்கு தேவையாக இருக்கவில்லை. **RSS,BJP,பஜ்ரங்தள்** இந்த இயக்கங்கள் மதம் மாற்ற தொடங்கியது, மட்டுமல்லாமல் மற்ற **மத ஆலயங்களை** குறிப்பாக கிறிஸ்தவ ஆலயங்களை இடிக்கவும், தீவைத்து கொளுத்தவும் தொடங்கிவிட்டனர்.

# இந்திய தலைநகரான டெல்லியில் கிறிஸ்தவ தேவலாயம் இடிப்பு:

❖ இந்திய தலைநகரான **டெல்லியில்** உள்ள மிகப்பெரிய கிறிஸ்தவ தேவலாயம் தீயிட்டு கொளுத்தப்பட்டது. **St.Sebastians Church** கிழக்கு டெல்லியில் **டிலிஷ்ட் கார்டன்** என்ற இடத்தில் அமைந்துள்ளது. டெல்லி ஆர்ச் பிஷப் அவர்கள் இந்த தாக்குதலைக்குறித்து பிரதமர் திரு.மோடியிடம் தீ வைத்தவர்களை கண்டுபிடித்து விசாரிக்க மனு கொடுத்துள்ளார்.

ஒரு ஆள் டெல்லி ஆலய மாதா சிலையை இடிப்பதை ஆலய கேமராவில் பதிவானதை கடந்த மாதம் TVயில் காட்டினார்கள். டெல்லி போலீஸ் இதுவரை தீ வைத்தவர்களையோ, கோயிலை இடித்து சேதமாக்கியவர்களையோ கைது செய்யவில்லை.

ஆகவே **டெல்லியில் உள்ள அனைத்து கிறிஸ்தவ சபைகளும் இணைந்து** இரவு ஊர்வலமாக மெழுகுதிரியை கொளுத்தி கைகளில் ஏந்தி புறப்பட்டு தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். ஆனால் இதுவரை டெல்லி போலீஸ் எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தகவல் இல்லை.







❖ பொரும்பான்மை கிறிஸ்தவர்கள் வாழும், படித்தவர்கள் பெரும்பான்மையினராக உள்ள மாநிலம் என்ற பெயர் பெற்ற **கேரளா** மாநிலத்தில் 2014 டிசம்பர் மாதம் 21ம் தேதி **ஆலப்புழா** என்ற மாவட்டத்தில் 8 கிறிஸ்தவ குடும்பங்களை சேர்ந்த **30 பேர்களை** இந்துக்களாக மாற்றிவிட்டோம் என்று இந்துமத தீவிரவாதிகளான **விஷ்வ ஹிந்து பரிஷத்** அமைப்பினர் பகிரங்கமாக அறிவித்து மங்கள விழா நடத்தினார்கள்.

மேலும் 2015 ஜனவரி மாதம் 13ம் தேதி கேரளாவில் **கோட்டயம்** என்ற ஊரில் 10 கிறிஸ்தவர்களை இந்துக்களாக மாற்றும் சடங்கு நடைப்பெற்றது.





# குஜராத்திலும் மதமாற்றம் நடைபெறும் படங்கள்

❖ அதேபோல் 2014 டிசம்பர் 21ம் தேதி பிரதமர் மோடி அவர்களின் சொந்த மாநிலமான குஜராத்தில் 225 கிறிஸ்தவர்களை அதே **விஷ்வ ஹிந்து பரிஷத்** இயக்கத்தினர் லட்சக்கணக்கில் பணம் கொடுத்து இந்துக்களாக மாற்றியதாக அறிவித்தனர். பணம் கொடுத்து இந்துக்களாக இந்து மதத்துக்கு மாறிய கிறிஸ்தவர்களிடமிருந்த பைபிளை பறித்துக்கொண்டு **கீதை** புத்தகத்தை ஒவ்வொருவருக்கும் கொடுத்தனர். இந்த மத மாற்ற நிகழ்ச்சி குஜராத் மாநிலத்தில் **வல்சாட்** மாவட்டத்தில் உள்ள அர்னாய் என்ற கிராமத்தில் இதற்கான மங்களவிழா நடத்தப்பட்டது.





## முஸ்லீம்கள் இந்து மதத்துக்கு மாறினர்:

❖ **உத்திரபிரதேசம்(உ.பி)** மாநிலத்தில் ஆக்ராவில் **முஸ்லீம்** மதத்தில் உள்ளவர்களை **இந்து மதத்தினராக** மாற்றும் பூஜை நடப்பதை காண்கிறீர்கள்.



குஜராத், உ.பி. மாநில உயர் அதிகாரிகளிடம் இதைப்பற்றி பத்திரிக்கையாளர் விசாரித்த போது மதம் மாறிய யாரும் இதுவரை எந்த புகாரும் எங்களிடம் கொடுக்கவில்லை. ஆகவே நாங்கள் இந்த விஷயத்தில் ஒன்றும் நடவடிக்கை எடுக்கமுடியாது என்றனர்.

# கிறிஸ்மஸ் தினம் விடுமுறை இல்லை:

❖ **இந்த மதமாற்றம்** தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் கிறிஸ்தவர்கள் கொண்டாடும் கிறிஸ்மஸ் தினமான டிசம்பர் 25ம் தேதியை விடுமுறை நாள் இல்லை என்று அறிவித்ததோடல்லாமல், BJPயை சேர்ந்த முன்னாள் பிரதமரான வாஜ்பாய் அவர்களின் பிறந்த நாளாக டிசம்பர் 25ம் தேதியை கொண்டாடவேண்டும் என்றார்கள்.

அதோடு **நல்லாட்சி தினம்** என்ற பெயரில் அந்த **கிறிஸ்மஸ்** தினத்தில் இந்தியாவில் உள்ள எல்லா பள்ளிகூடங்களிலும் **கட்டுரை போட்டிகள்** நடத்தபடவேண்டும் 25ம் தேதியில் அரசாங்க விடுமுறை இனி கிடையாது. அரசாங்க அலுவலர்கள் யாவரும் அன்றைய தினம் அலுவலகம் வந்திருக்க வேண்டும். கிறிஸ்மஸ் தினத்தில் **ரத்ததானம் நடத்தவும், மாரத்தான்** போன்ற ஒட்டபந்தயங்களை நடத்தவும் கட்டளையிடப்பட்டுள்ளது.

நாளுக்குநாள் இந்துமத தீவிரவாத இயக்கத்தின் செயல்கள் பல விபரீதங்களை நாட்டில் உண்டாக்க போகிறது என்று அனைத்து எதிர்கட்சி தலைவர்களும் தங்கள் எதிர்ப்பை தெரிவித்து இந்த செயலலுக்கு பிரதமர்.**மோடி** அவர்கள் பதில் அளிக்கவேண்டும் என்றுகூறி **பார்லிமென்ட்டில்** போராடினார்கள். அத்தனை போராட்டங்களையும் கவனித்தும் **மோடி** அவர்கள் பதில் பேசாமல் உட்கார்ந்து பார்த்துக்கொண்டேயிருந்தார். எதிர்கட்சிகள் அனைவரும் **பல நாட்கள் பார்லிமென்ட்டை** நடக்கவிடாமல் முடக்கினர். இதனால் பல கோடிகள் நஷ்டம், பல நல்ல திட்டங்கள் நிறைவேற்ற முடியாமல் போனாது. இந்திய நாட்டுக்கும் பல மாநிலங்களுக்கும் பெரும் நஷ்டத்தை உண்டாக்கின. இவ்வளவு கொந்தளிப்புகள் நடந்தும் மக்கள் பிரதிநிதிகளின் கேள்விகளுக்கு பதில் சொல்ல கடமைப்பட்ட பிரதமர்.மோடி அவர்கள் **இருகிய முகத்துடன் தன் ஆசனத்தில்** அமர்ந்திருந்தது அவரின் பிடிவாதத்தையும், இப்படிப்பட்ட மத மாற்றங்களுக்கு தானும் உடந்தையாக இருப்பதைப்போல் காணப்பட்டது என்று TVயில் இவைகளை கவனித்த இந்திய மக்கள் கூற ஆரம்பித்தாக பேசப்பட்டது.

BJPயின் பிரதமர் வேட்பாளரான திரு.**மோடி** அவர்கள் தேர்தல் அறிக்கையில் கூறியதை நிறைவேற்ற தொடங்கிவிட்டார் என்று மக்கள் பேச தொடங்கிவிட்டனர்.

## கொள்கை நிறைவேற்றம்:

எந்த கட்சிகளுக்கும் தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் தங்கள் கொள்கையை நிறைவேற்றதான் கொள்கை அறிவிப்பை கூறுவது வழக்கம். BJP அரசின் இந்த செயல்பாடுகள் புதிதல்ல.

தமிழகத்தில் **அறிஞர்.அண்ணா** அவர்கள் தலைமையில் **தி.மு.க**(DMK) ஆட்சிக்கு வராதிருந்தால் **சுய மரியாதைத் திருமணங்களுக்கு** சட்ட அங்கீகாரம் கிடைத்திருக்காது. அப்படியே பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடும் பெரியஅளவு அதிகரிக்க வாய்பிருந்திருக்காது.

தமிழ்நாட்டில் அன்று **ஹிந்தி** எதிர்ப்புக்காகவும், ரூபாய்க்கு **ஒருபடி அரிசி** என்ற கவர்ச்சி திட்டங்களுக்காகவும் மக்கள் ஓட்டுபோட்டு DMK கட்சியை ஜெயிக்க வைத்தார்கள். அதை தி.மு.க கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் தன் கொள்கையும் நிறைவேற்றியும் வைத்தார்கள்.

அதே வழியில்தான் திரு.**மோடி** அவர்கள் ஒவ்வொரு தேர்தல் கூட்டங்களிலும் **ஹிந்துத்துவா** கொள்கையை நடைமுறைப்படுத்துவோம் என்று கூறிதான் இப்போது ஆட்சியை பிடித்துள்ளார்கள். அந்த கொள்கைதான் இப்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்துமத கொள்கை திணிக்கப்படுகிறது.

ஆனால் அதுவே மத கலவரத்தையும் உண்டாக்க காரணமாக போகிறது என்பதை இப்போதுதான் BJPக்கு ஓட்டுபோட்ட மக்கள் சிந்திக்கவும்,பயப்படவும் தொடங்கியுள்ளார்கள்.

❖ கிறிஸ்தவர்களின் ஆலயத்தை இடித்தால் **கிறிஸ்தவர்கள்** எதிர்க்கமாட்டார்கள். இப்படித்தான் சாத்வீக ஊர்வலம் நடத்தி தங்கள் எதிர்ப்பை தெரிவிப்பார்கள்.

ஆனால் **முகமதியர்களின்** மத ஸ்தலங்களில் **ஹிந்துத்துவா**க்காரர்கள் கை வைக்கும்போதுதான் இந்தியாவில் **இரத்த ஆறு ஓடும்நிலைக்கு** இந்தியா தள்ளப்படும். அதைக்குறித்துதான் **இந்தியர்கள்** பயப்படுகிறார்கள்.

பிரதமர்.**மோடி** அவர்கள் RSS,VHP,பஜ்ரங்தள் இயக்கங்களை இப்போதே கட்டுப்படுத்தாவிட்டால் இந்தியாவின் நிலைமை மிக மோசமாகும்.

❖ உலக சரித்திரத்தில் நாம் காண்பது என்னவென்றால் **ஆட்சி அதிகாரத்தில்** யார் அமருகிறார்களோ அவர்கள் எந்த மத நம்பிக்கையை உடையவர்களாக இருக்கிறார்களோ அவர்களின் நம்பிக்கையை சார்ந்துதான் உலக நாடுகளில் மத மாற்றங்கள் நடந்திருக்கின்றன.

❖ உதாரணமாக பிரிட்டிஷ் **அரசர் எட்டாம் ஹென்றி** அவர்கள் **ரோமன் கத்தோலிக்க** சபைகளையும், **போப் ஆண்டவரையும்** எதிர்த்துதான் இங்கிலாந்தில் **புரோட்டஸ்ட்டன்ட்** திருச்சபைகளை உருவாக்கினார். ஹென்றி ராஜா எடுத்த நிலைபாட்டின் அடிப்படையில் அந்நாட்டு மக்களும் **புரோட்டஸ்ட்டன்ட்களாக** மாறினார்கள்.

அதேபோல் **இந்தியாவில் முகலாய அரசர்கள்** ஆட்சியை பிடித்தபின்புதான் **இஸ்லாம் மதம்**, இஸ்லாம் அதிகமாக இந்தியாவில் வேறுரூன்றியது. ஆக சரித்திர சக்கரம் இந்தியாவில் சுழல ஆரம்பித்துள்ளது.

இன்று மிருக பெலத்தோடு BJP ஆளும் கட்சியாக தெரிந்தெடுத்து அந்த **காவி படைகளிடம்தான் இந்தியர்களே** ஆட்சியை ஒப்படைத்துள்ளனர்.

இனி நடக்கப்போவதை நம் இந்திய மக்கள் யாவரும் அனுபவித்துதான் தீரவேண்டும்.

# கிறிஸ்தவர்களை மதம்மாற்றிய RSS,VHP போன்ற இயக்கத்தினருக்கு நன்றி:

கிறிஸ்தவர்களை மதம்மாற்றியதில் உண்மை கிறிஸ்தவர்கள் யாரும் கவலைப்படக் கூடாது. காரணம் **பணத்துக்காக** கிறிஸ்துவைவிட்டு இந்து மதத்துக்கு மாறியவர்கள் யாரும் **உண்மையானகிறிஸ்தவர்களாக** இருக்கமுடியாது. பணத்துக்காக மனைவியை விபச்சாரம் செய்ய அனுப்பிய கணவர்மார்களைப்போல்தான் இதுவும். மதம் மாறிய இந்த கிறிஸ்தவர்கள் அங்கும் உண்மையாக இருக்கமாட்டார்கள். இவர்கள் முன்பு கிறிஸ்தவத்தில் இருந்தபோது **போலி கிறிஸ்தவர்களாகத்தான்** வாழ்ந்திருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்தவ சபைகளில் இல்லாமல் சபையைவிட்டு சீக்கிரம் வெளியேறுவது கிறிஸ்தவ சபைகளுக்கு நல்லது.

❖ **குஜராத்திலும்,ராஜஸ்தானிலும்,சட்டீஸ்கர்,பீகார்,மகாராஷ்ட்ரா,உ.**பி போன்ற மாநிலங்களில் நம் மிஷனரிகள் மூலமாக கிறிஸ்து அறிவிக்கப்பட்டார்.

கிறிஸ்து அவர்கள் மனதை மாற்றி, சுபாவத்தைமாற்றி, மதுபானத்தை நிறுத்த வைத்து, மனித கொலைகளையும் இவர்கள் நிறுத்தியதால் அவர்கள் மனசமாதானத்துடன் வாழ்கிறார்கள். இத்தனை காலம் இவர்கள் அனுபவிக்காத கிறிஸ்தவ அன்பின் சுகத்தை இயேசுவை ஏற்றுக்கொண்ட இவர்கள் கிறிஸ்தவ சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு எந்த மிஷனரியும்,**பணம்,கோதுமை,அரிசி** எதுவும் இவர்களுக்கு கொடுக்காமலேயே இவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, இப்போது அத்தனை **ஆதிவாசிகளும்,சுவிசேஷம் அறிவிக்கும் மிஷனரிகளாக** மாறி தங்கள் இனத்தில் உள்ளவர்களுக்கு தங்கள் மனமாற்றத்தை சாட்சியாக அறிவித்துகொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களுக்குள் இருக்கும் கிறிஸ்துவை மற்ற ஆதிவாசிகளுக்கு வெளிப்படுத்து கிறார்கள். **இதுதான் மனமாற்றம்! - இது மதமாற்றம் அல்ல!. கிறிஸ்தவம் ஒரு மதமும் அல்ல!. அது ஒரு மார்க்கம்.** இயேசு கிறிஸ்துவும் **ஒரு மதத்தை** ஸ்தாபிக்க இந்த உலகில் பிறக்கவில்லை. தன் **அன்பை வெளிப்படுத்தவே** பிறந்தார். அதுதான் கிறிஸ்மஸ்! டிசம்பர் 25ம் தேதி இயேசுகிறிஸ்து பிறக்கவில்லை. ஆகவே உண்மை கிறிஸ்தவர்களுக்கு டிசம்பர் 25ம் தேதி விடுமுறை இல்லை என்று அரசாங்கம் அறிவித்தாலும் கவலைப்படமாட்டார்கள். **உண்மை** கிறிஸ்தவர்களுக்கு வாழும் நாளெல்லாம் **கிறிஸ்மஸ்தான்.** இதை புரிந்துக்கொண்டவர்கள் யாரையும் எதிர்த்து போராடமாட்டார்கள். இதை **BJP அரசாங்கம் RSS, பஜ்ரங்தள்** இயக்கங்கள் புரிந்துக்கொள்ளவேண்டும் என்றுதான் பகிரங்கமாக இதை எழுதி அறிவிக்கிறேன்.

❖ அதனால்தான் அன்று இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக பதவி வகித்த முதல் இந்தியரும்,தமிழருமான திரு.**ராஜகோபாலாச்சாரியார்** அவர்கள் கூறினார். **கிறிஸ்தவர்களை ஒன்றும் செய்யாதிருங்கள். அவர்கள் மூட்டை பூச்சி போன்றவர்கள் அவர்களை நசுக்கினால் ஆயிரம் மூட்டை பூச்சிகளாக வெளிவந்து பெருகுவார்கள்** என்றார்.

இயேசுகிறிஸ்து கூறினார். **கோதுமை மணி செத்ததேயாகில் நிறைந்த பலன் தரும்** என்றார். அந்த அடிப்படையில்தான் இந்தியாவில் சுவிசேஷம் அறிவிக்க வந்த மிஷனரிமார்கள் தங்களையே கோதுமை மணிகளாக ஆக்கி இந்திய மண்ணில் சுவிசேஷத்துக்காக மரித்து விதைக்கப்பட்டார்கள். பலர் இரத்தசாட்சிகளாக மரித்ததினால்தான் இன்று **கிறிஸ்தவம்** இந்தியா முழுவதும் பரவி இந்தியாவுக்கு மிஷனரிகளை அனுப்பிய அமெரிக்க-ஐரேப்பா-ஜெர்மனி

ஆகிய நாடுகளுக்கே சுவிசேஷம் அறிவிக்கும் இந்திய மிஷனரிகளாக அந்நாடுகளில் பணியாற்றுகின்றனர் என்றால் கிறிஸ்துவின் அன்பின் மகத்துவம் எத்தகையது என்பதை அறிந்து தேவனை துதிப்போம்.

## RSS இயக்க தலைவர்களில் ஒருவர் இந்து மதத்தைப்பற்றி கூறியது:



அவர் வேறு யாருமல்ல **தமிழ்நாட்டு** மக்களும் இந்திய அரசியல் வாதிகளும், நன்றாக அறிந்த பிராமண இதிகாசங்களை நன்கு அறிந்தவரும், அரசியல் விமர்சகரும், **மகாபாரதத்துக்கு** விளக்க உரை எழுதியவருமான **துக்ளக்** ஆசிரியர் **சோ ராமசாமி** அவர்களாகும். இவர் நன்கு சட்டம் படித்த ஒரு வக்கீலாகும்.

## ஹிந்து மதம்:

வேறொரு மதத்தைச் சார்ந்தவர்களை **ஹிந்துக்களாக** மாற்றிவிடவேண்டும் என்ற கட்டளை ஹிந்து மத சாஸ்திரங்கள் எதிலும் இல்லை. சொல்லப்போனால் ஒருவனைப் பார்த்து இவன்தான் **இந்து** என்று அடையாளப்படுத்த எந்த ஒரு விளக்கமும் **ஹிந்து** மத சாஸ்திரங்களில் கிடையாது. பல இந்துமத சாஸ்திரங்கள் மேன்மையுள்ளவர்களை சிலரை குறிப்பிட்டு அடையாளம் காட்டி இவன்தான் **சிறந்த மனிதன்** என்ற விளக்கம் கூற முற்படுகின்றன. ஆனால் அப்படிப்பட்டவர்களை **ஹிந்துக்கள்** என்று யாரும் அழைக்கப்படவில்லை.

இப்படிப்பட்ட இந்து மதத்துக்கு வேறு ஒரு மதத்தை சேர்ந்த ஒருவரை எப்படி? எந்த அடையாளத்தை வைத்து? இந்துவாக மாற்றுவது!.

அப்படி **ஹிந்துவாக** மாற்ற இந்துவேதங்களில் எங்கு எழுதியிருக்கிறது? **ஹிந்து என்று கூற என்ன அங்கீகாரம்** இருக்கிறது? ஒன்றுமில்லையே?

இப்படி தேவையில்லாமல், அர்த்தமில்லாமல் இந்து மதத்துக்கு ஒருவரை மதமாற்றம் செய்ய முனைபவர்கள் வேண்டுமென்றே **மத விரோதத்தைத்தான்** இந்தியாவில் வளர்க்க முயல்கிறார்கள். சமீபத்தில் இந்தியாவில் ஆக்ரா நகரில் பல **முஸ்லீம்கள்** ஹிந்துக்களாக மாற்ற நடந்த வைபவம் மேலே நான் குறிப்பிட்ட வகையை சேர்ந்ததே? அதற்கு எல்லா மதத்திலிருந்தும், பார்லிமென்ட்டிலும் எதிர்ப்பு தோன்றியதில் வியப்பு இல்லை. அந்த எதிர்ப்பு நியாயமானதே?.

## பகவத்கீதை புத்தகத்தை தேசிய புனித நூலாக அறிவிக்கவேண்டும்:

ஹிந்துத்துவாக்காரர்கள் **பாபர் மசூதியை** இடித்ததின்மூலம் அவர்கள் அயோத்தியை கடித்து, **ராமரை** கடித்து இப்போது **பகவத்கீதையையே** கடிக்க வந்துவிட்டார்கள்.

ஆளும் BJP கட்சியின் மூத்த அமைச்சர்களில் ஒருவரான **சுஷ்மாஸ்வராஜ்** என்பவர் **பகவத்கீதையை** இந்திய **தேசிய புனித நூலாக** சட்ட பூர்வமாக அறிவிக்கவேண்டும் என்று கோரியிருக்கிறார். இவர்களோடு சிலர் **பகவத்கீதை** புத்தகத்தை ஒரு **மத சார்ப்பற்ற நூல்** என்று வாதிடுகிறார்கள். இதை யாரும் கண்டிப்பாக ஏற்க முடியாத அர்த்தமில்லாத வாதமாகும்.

**பகவத்கீதையின்** பல அத்தியாயங்களில், பல **ஸ்லோகங்களில்** கிருஷ்ணன் கூறுகிறதாக எழுதியுள்ளதை கவனிக்கவும், அதாவது தன்னை **(கிருஷ்ணனை)** நம்புகிறவன் மேன்மையடைவான் என்பதை வலியுறுத்தி சொல்கிறதை வாசிக்கிறோம். **பக்தியின்** சிறப்பை

எடுத்து சொல்லப்படுகிறபோதெல்லாம் அது கீதையில் **கிருஷ்ணன்** அல்லது **நாராயணன்** மீதான பக்தியைத்தான் வலியுறுத்தி கூறுகிறது.

கீதையில் ஒரு கட்டத்தில் **விஸ்வ ரூப காட்சியில்** எல்லா உலகங்களையும் **நாராயணன்** தன்னுள் அடக்கியிருக்கின்றான் என்று விஸ்தாரமாக எடுத்துரைக்கப்படுகிறது. அதோடு இந்துக்களில் பல தெய்வங்கள் உண்டே. அப்படிப்பட்ட தெய்வங்களை வணங்குதல்கூட தன்னையே நாடி வந்துசேரும் என்று சொல்வதாக கீதையில் எழுதப்பட்டுள்ளது. மேலும் **நாராயணனை** சரண் அடைந்தால் அனைத்து பாவங்களிலிருந்தும் விடுபடலாம் என்று **அர்ஜீனனுக்கு** உபதேசிக்கப்படுவதாக கீதையில் எழுதப்பட்டுள்ளது. இப்படி **கிருஷ்ணன்** அல்லது **விஷ்ணுவின்** மேன்மையை விளக்குகிற **கீதை புத்தகத்தை இந்தியா** அனைத்துக்கும் இந்திய **புனித நூலாக** ஏற்கவேண்டும் என்று அரசாங்கம் அறிவித்தால் **முஸ்லீம்** மதத்தினரோ, **கிறிஸ்தவர்களோ அதை** எப்படி ஏற்பார்கள்?. இதில் நியாயம் ஒன்றுமில்லையே!.

## ஆகையால்(சோவாகிய) நான் கூறுவது என்னவென்றால்:

❖ **மைனரிட்டி மதத்தை** சார்ந்தவர்களின் உணர்ச்சிகளைத் துண்டுகிற செயலாகத்தான் இவர்களின் செயல் அமையும். BJP கட்சியில் உள்ள பல MPக்கள், இன்னும் உள்ள சில முக்கியஸ்தர்கள் இப்படி பொருப்பில்லாமல் தங்கள் மனம்போனபோக்கில் பேசி வருவது ஆளும் கட்சிக்கு ஆபத்தானது ஆகும் என்று எச்சரிக்கிறேன்!.

BJP கட்சியிலேயே **பிரதமர்.மோடியை** உள்ளத்தில் **வெறுப்பவர்கள், அவரை பிரதமராக ஏற்க்காதவர்கள்** கட்சிக்குள் நிறையபேர் உண்டு. அப்படிப்பட்டவர்கள் பிரதமர்.மோடி அவர்களுக்கு தங்களின் இப்படிப்பட்ட பேச்சால் பிரதமர் ஆட்சிக்கு பிரச்சனை உண்டாக்க பார்க்கிறார்கள்.

இதன் அடிப்படையில்தான் BJP ஆட்களில் சிலர் **இந்து** மதத்தை ஏற்காத **முஸ்லீம்கள்** இந்தியாவில் இருக்கவேண்டாம் . அவர்கள் **பாகிஸ்தானுக்கு** போகவேண்டும் என்றும், இந்தியாவில் வாழும் யார் ஒருவர் **ராமனை** தந்தையாக ஏற்கவில்லையோ அவர்கள் **ஒரு தகப்பனுக்கு பிறந்தவர்கள் அல்ல** என்ற அர்த்தத்தில் **அவர்கள் யாவரும் முறைகேடாக பிறந்த இந்தியர்கள்** என்று கூறி மத கலவரத்தை துண்டுவதைப்போல் பல ஆபத்தான வார்த்தைகளால் மற்ற மத மக்களை தாக்கி துவேஷத்தை துண்டுகிற பல பேச்சுக்கள் **ஹிந்துத்துவா** அமைப்புகளால் அரங்கேற்றப்படுகிறது. இது இந்திய சமாதானத்தையே குலைப்பதாகும்.



இப்படியெல்லாம் பேசி உளரிகொட்டி இந்த இந்திய தேசத்தை **ஹிந்து** தேசமாக இவர்களால் மாற்றிவிட முடியவே முடியாது என்பது **சுஷ்மாஸ்வராஜ்** போன்ற மூத்த அமைச்சர்களுக்கு தெரியும். பின் ஏன் இப்படி பேசுகிறார்கள்?.

பிரதமர்.**மோடி** அவர்களின் பெயர் உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்துள்ளது. பிரதமர்.மோடி அவர்கள் தன் நிர்வாகத்தில் கூடஉள்ள சகஅமைச்சர்களிடம் நிர்வாகத்தில் கெடுபிடியை காட்டுகிறார். நிர்வாகத்தில் மோடி அவர்கள் கண்டிப்பாக இருக்கிறார். இப்போதுள்ள சூழ்நிலையில் BJP கட்சியில் உள்ள யாராவது **பிரதமர்.மோடியை எதிர்த்தால்** அவர்களுக்கு **இந்துமதத்தினர்** யாரும் ஆதரவு தரமாட்டார்கள் என்ற நிலை

தோன்றிவிட்டது. மோடி அவர்கள் இல்லை என்றால் BJP கட்சி இனி வெற்றி பெறுமா? என்ற நிலை ஏற்பட்டுவிட்டதால் பிரதமர்.மோடி அவர்கள் நடத்தும் ஆட்சியில் அவருக்கு கெட்ட பெயர் உண்டாக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

பிரதமர்.**மோடி** அவர்கள் இதை கவனத்தில் கொண்டு இப்படி மதமாற்ற பிரச்சனை உண்டாக்கும் தன் கட்சியினரை அவர்கள் யாராயிருந்தாலும் ஆரம்பத்திலேயே அவர்களைக் கிள்ளி எறிய முனையவேண்டும். அதுதான் இந்திய தேசத்துக்கு நல்லது.

❖ மேலே வாசித்த விவரங்கள் திரு.**சோ** அவர்கள் எழுதியுள்ளதின் தொகுப்பு ஆகும். இந்திய மக்கள் சோ அவர்களின் ஆலோசனைகளை கவனத்தில் கொள்வது நல்லது. RSS இயக்கத்தில்உள்ள **சோ** அவர்களே இப்படி வெளிப்படையாக எழுதியது நாட்டுக்கு நல்லது.

# இந்து தேசம்:

நம் கிறிஸ்தவ வேதத்தில் எஸ்தர் என்ற புத்தகத்தில் முதல் அதிகாரம் முதல் வசனத்தில் **இந்து தேசம்** என்று ஆரம்பிக்கிறது. **சிந்துநதி** சமவெளி கலாச்சாரம் நம் இந்தியாவின் ஆரம்ப கால கலச்சாரம். இந்த வார்த்தைதான் மருவி நாளாவட்டத்தில் **சிந்து** என்பது **இந்து** என்று வழக்க சொல்லாக மாறியது. ஆனால் இந்து கலாச்சாரம் ஒரு மதம் அல்ல. அதைத்தான் **துக்ளக் ஆசிரியர் சோ** அவர்கள் **இந்து** என்பவனுக்கு **இந்து** மதத்தில் எந்த ஒரு குறிப்பிடும்படியான அடையாளமும் இல்லை என்று எழுதினார்.

முப்பது முக்கோடி தேவர்களையும் **இந்து** என்ற மதத்திற்குள் புகுத்தியது **ஆரியன்** ஆகும் என்றாலும் இவர்கள் குறிப்பிடுகிற **சிந்துநதியும், சிந்து நாகரீகமும்** இப்போது பாகிஸ்தான் பகுதிக்குள் இருக்கிறது. இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிக்கப்பட்டபோது **பஞ்சாப்** மாநிலம் இரண்டாக பிரித்து பஞ்சாப்பின் பாதி **பாகிஸ்தானிலும்,** மறுபகுதி **இந்தியாவிலுமாக** அமைந்துவிட்டது. ஆகவே இந்தியாவில் உள்ள இஸ்லாமியர் பாகிஸ்தானுக்கு போகவேண்டும் என்று கூறுகிற இந்துமத தீவிரவாதிகள் அந்த **இந்துமத** கலாச்சார ஆரம்ப இடமான பாகிஸ்தானில் **சிந்துநதிதான் அதற்கு** ஆரம்பமாகும். ஆகவே பாகிஸ்தானுக்கு இந்துக்கள்தான் போகவேண்டும் இந்திய இஸ்லாமியர்களல்ல.

இந்துமத தீவிரவாதிகளான RSS இயக்கத்தினரின் யூனிபர்ம்கூட அதாவது அவர்கள் அணியும் அறைகால் சட்டை(ட்ரவுசர்) ஜெர்மனி தேச கொடுங்கோலான **ஹிட்லரின் நாசிக்** தீவிரவகுப்பினர் அணிந்த உடையாகும். அவர்கள் **ஹிட்லர்** சர்வாதிகாரியின் ஆட்களாகும். அவர்களுக்கும் RSS இயக்கத்தினரின் ஆட்களுக்கும் இப்போது வித்தியாசம் இல்லை.

மேலும் **RSS, BJP,VHP, பஜ்ரங்தள்,சிவசேனா** போன்ற இந்துமத தீவிரவாதிகள் தங்கள் கட்சியையும், தங்கள் ஆட்களையும் அடையாளம் காண **காவி** துணியில் தங்கள் கொடியையும்,காவி துணியில் உடையையும் தைத்துக்கொள்கிறார்கள். இந்த காவிக்கலரும், இந்துக்களுக்குறிய அடையாள கலர் அல்ல. புத்த மதத்தினரின் குறிப்பாக புத்தர் அணிந்த காவி கலர் உடையை தங்கள் இனத்துக்கு அடையாளமாக்கி **காவி** கலர் படையாளிகளாக அறிமுகப்படுத்தப்படுகின்றனர்.

அப்படியே **இந்து மதத்துக்கு** மதம் மாறியவர்கள் அரசாங்கம் அனுகூலங்கள் பெற எந்த **ஜாதியையும்** தெரிந்தெடுத்துக்கொள்ளலாம் என்ற பெரிய பொய்களைக்கூறி மக்களை ஏமாற்றுகின்றனர். அப்படி எந்த **ஜாதியையும்** ஒருவன் தெரிந்தெடுத்து அந்த **ஜாதியில் சேரமுடியாது.** குறிப்பிட்ட **ஜாதியில் பிறந்து வளர்ந்தவன்** அந்த **ஜாதிக்குரியவன்** என்ற

அடிப்படையில்தான் **ஜாதி சான்றிதழ்** அளிக்கப்படுகிறது. எந்த ஜாதியில் உள்ளவனும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு **கிறிஸ்தவன்** என்று அழைக்கப்படலாம். ஆனால் ஒரு கிறிஸ்தவன் அல்லது முஸ்லீம் ஒரு குறிப்பிட்ட ஜாதியில் சேருகிறேன் என்றால் சட்டப்படி அரசாங்கமும் அதை அனுமதிக்காது. ஆகவே **தாய் மதத்துக்கு மாற்றுகிறேன்** என்று கூறும் இந்த தீவிரவாதிகள் இந்திய மக்களிடம் ஜாதி சான்றிதழ் வாங்கி தருகிறேன் என்று மக்களை மிகவும் ஏமாற்றுகிறார்கள்.

## அவிசுவாசி பிரிந்துப்போனால் போகட்டும்: 1 கொரி 7:14.

கிறிஸ்தவர்கள் பலர் **இந்து** மதத்துக்கு மாறிவிட்ட செய்திகளை வாசித்தீர்கள். அது நல்ல செய்தியாகும். சபையில் விசுவாசிகள் மாத்திரம் அதாவது **உண்மையான கிறிஸ்தவர்கள்**மட்டும் நம் சபையில் இருந்தால் போதும்.

**கிறிஸ்தவர்கள்** என்று பெயர்வைத்துக்கொண்டு ஜெபத்தில் என் பெயரை கூப்பிட மாட்டார்களா என்று எதிர்பார்க்கிற இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் **குறிக்கேட்கும்** இந்துக்கள் மாதிரியாகும். அப்படிப்பட்டவர்களும், ஜெபத்தில் **கர்த்தர் சொல்ல சொன்னார்** என்றும், **கர்த்தர் ஜெபத்தில் காண்பித்தார்** என்பவர்களும் தானாகவே இந்துமதத்துக்கு போய்விடுவது கிறிஸ்தவ மக்களை காப்பாற்றியதற்குச் சமம். இப்படிப்பட்டவர்களை RSS, பஜ்ரங்தள் ஆட்கள் தங்கள் இந்து மதத்துக்குக் கூட்டி சென்றால் அவர்களுக்கு நான் நன்றி சொல்வேன். காரணம் இப்படி பகிரங்கமாக மேடையில் பொய்பேசும் இப்படிப்பட்ட ஊழியர்கள் இருந்தால் என்ன? போனால் என்ன?. அதுபோல் **சாட்சியில்லாத பிஷப்மார்கள்,சபை பணத்தை திருடும் சபை பொருப்பாளர்கள்,டையோசிஸ் நிர்வாகிகள்** யாவரும் இந்துமதத்துக்கே திரும்பி போய்விட்டால் சபைகள் உருபட வாய்ப்புண்டாகும். ஆகவே தான் கிறிஸ்தவர்களை இந்துக்களாக மாற்றும் **RSS,VHP,BJP,பஜ்ரங்தள்** போன்ற இயக்கங்களுக்கு நன்றி கூறுகிறேன்.


## தமிழ்நாட்டு கள்ளதீர்க்கதரிசிகள்:

2014 ஆகஸ்ட் மாதம் 14ம் தேதி **இமயமலையில்** பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ள பெருக்கு காரணமாக இந்தியாவில் உத்திரபிரதேச மாநிலத்தில் 1500 கிராமங்கள் முழுவதையும் வெள்ளம் அடித்து சென்றது. இன்று அந்த கிராமங்கள் இருந்ததற்கான அடையாளங்களே இல்லை. ஆயிரக்கணக்கான குடும்பங்களை வெள்ளம் கொண்டுபோய்விட்டது. குடும்பம் முழுவதும் வெள்ளம் அடித்து சென்றது. இத்தனை பெரிய இழப்பைக்குறித்து வானிலை அறிவிப்பு நிலையம் எச்சரித்தது. ஆனால் நம் கள்ள தீர்க்கதரிசிகளுக்கு இந்த கிராமங்களின் மிகப்பெரிய அழிவை கர்த்தர் ஏன் காட்டவில்லை?. ஒருவேளை கர்த்தர் இவர்களுக்கு காட்டியிருப்பார். ஆனால்,அப்போது இவர்கள் **ஜப்பான்,இந்தோனிஷ்யா** அழிவு நிலவரங்களை கவனிக்க போயிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்போதுதானே அடுத்த வருட தீர்க்கதரிசனத்தில் இந்த உலக நாடுகளைப்பற்றி தீர்க்கதரிசனம் கூறமுடியும்.

**தந்திர ஜெபம்:** கர்த்தர் இன்று எல்லா விதமான வியாதிகளையும் சுகமாக்க போவதாக கூறினார் என்று இந்த கள்ளஊழியர்கள் பொதுவாக ஜெபத்தில்கூறிவிட்டால்போதும். வயிற்றுவலி,தலைவலி,கேன்சர்,எய்ட்ஸ்,சர்க்கரை வியாதி இப்படிப்பட்ட வியாதியஸ்தர்கள் எல்லாம் சுகமானதாக சாட்சிசொல்ல மேடை ஏறலாமே? எல்லா வியாதியையும் சுகமாக்குவேன் என்று கர்த்தர் கூறியபடி சகோதரன் ஜெபித்தபோது மேலே குறிப்பிட்ட அத்தனை வியாதியஸ்தர் களும் சாட்சி கூறினால் மிக பொருத்தமாக இருக்குமே!. மொத்த பிரார்த்தனை, மொத்த சுகம்(Total Healing) இது கேட்க நன்றாக இருக்கிறதல்லவா?.

# கேள்வி - பதில்

# ஜாமக்காரனின் பதில்கள்



## மனம் திறந்து எழுதுகிறேன்....உள்ளத்தின் ஆழத்திலிருந்து...

**கேள்வி:** **மற்ற ஊழியர்கள் எல்லாம் தங்கள் பத்திரிக்கையில் ஆசிரியர் குறிப்பில் எழுதும் போது ஆரம்ப வரிகளில் இதை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுதுகிறேன் என்றும் மனம்திறந்து எழுகிறேன் என்றும் எழுதுகிறார்கள்? நீங்கள் உங்கள் மன ஆழத்திலிருந்து எப்போது எழுத தொடங்குவீர்கள்?**

***பதில்:*** *எப்போது உள்ளம் ஒன்று நினைக்க (உதடுகள்) வாய் ஒன்றை கூறுகிறதோ அது உண்மையான செய்தியாக இருக்காது. கர்த்தர் வேதத்தில் கூறியதுபோல் அவர்கள் தங்கள் உதடுகளால் என்னை துதிக்கிறார்கள். அவர்கள் இருதயமோ என்னைவிட்டு விலகி இருக்கிறது என்பதைப்போல்* ***மனம்திறந்து எழுதுகிறேன் அல்லது பேசுகிறேன்*** *என்பவர்கள் யாரும் எல்லா நேரங்களிலும்* ***உண்மை பேசுவதில்லை*** *என்பது அர்த்தமாகிறது. இப்படிப்பட்டவர்கள் எப்போதாவது ஒருமுறை மட்டுமே உள்ளத்தின் ஆழத்திலிருந்து அல்லது* ***மனம்திறந்து பேசுகிறார்களோ*** *என்று நினைக்கிறேன். ஆகவே இவர்கள் ஏன் எப்போதாவது ஒருநாள் மட்டும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறார்கள் என்பது எனக்கு தெரியாது!. என்னை பொருத்தவரை நான் எப்போதும், எல்லா நேரமும் என் உள்ளம் என்ன சொல்கிறதோ அதையே பேசுகிறேன் அதையே எழுதுகிறேன். ஆகவே* ***உள்ளத்தின் ஆழத்திலிருந்து, மனம்திறந்து எழுதுகிறேன்*** *என்று நான் குறிப்பிடவேண்டிய அவசியமே எனக்கு ஏற்படவில்லை.*

## *தெளிவாக பேசுகிறார்- தெளிவாக காண்பிக்கிறார்:*

*வேறு சிலர் ஜெபத்தில் கூறும்போது கர்த்தர் இப்போது* ***தெளிவாக காண்பிக்கிறார், இப்போது தெளிவாக பேசுகிறார்*** *என்கிறார்கள். இதுவும் மேலே வாசித்ததைப்போல்* ***போலித்தனமான*** *வார்த்தையாகும். இதற்குமுன் ஜெபத்தில் காட்டிய மற்ற பெயர்கள்,வியாதிகள் பெயர்கள் யாவும்* ***மங்கலாக*** *தெளிவில்லாமல் இருந்திருக்கும். ஆனால் இப்போது* ***தெளிவாக காணப்பிக்கிறார், தெளிவாக கூறினார்*** *என்று இவர்கள் கூறினால் முன்பு கூறியது காண்பிக்கப்பட்டது எதுவும்* ***தெளிவற்றது*** *என்பது விளங்குகிறதல்லவா?.*

*என்னவோ இந்த கூட்டத்தையும், இவர்களையும் நம்ப ஒரு கூட்டம் இருக்கிறது. இவர்களை நம்பி காணிக்கை அனுப்பும் கூட்டமும் இருக்கிறது. இவர்கள் யாவரும்* ***தெளிவில்லாதக் கூட்டம்*** *என்பது விளங்குகிறது. இப்படிப்பட்ட தெளிவில்லாத ஊழியர்களை ஒரு சில கிறிஸ்தவ மக்கள் நம்புகிறார்கள் என்றால் நாம் என்ன செய்ய?.* ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி: சகோ.மோகன் சி.லாசரஸ் அவர்கள் கூறும்போது எங்களுக்கு கூடும் கூட்டத்தின் அளவு பெரியது ஆயிரக்கணக்கில் கூடுகிறது. அதனால் எங்களைப்பற்றி குறைக்கூறும் ஜாமக்காரன் போன்ற ஊழியர்களுக்கு பொறாமை அதிகம். ஆகவே அவர்கள் அப்படித்தான் எழுதுவார்கள் என்றாராம். இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?**

**பதில்:** பொறாமை : இரண்டு வியாபாரிகளுக்கு பொறாமை ஏற்படலாம். தன்னைவிட அவர் கடைக்கு ஆட்கள் அதிகம் சென்றால் **வருமானம் அவர்களுக்கு கூடினால்** மற்ற வியாபாரிக்கு **பொறாமை** உண்டாகும். இப்படிப்பட்டதை பொறாமை என்று கூறினால் பெருத்தமாக இருக்கும். நான் வியாபாரி அல்ல. நான் பண லாபம் எதிர்ப்பார்ப்பவன் அல்ல. அப்படியிருக்க மோகன் சி.லாசரஸ்ஸை பார்த்து எனக்கு எப்படி பொறாமை உண்டாகும்? என் ஊழியத்தில் எனக்கு பணக்குறைவோ இதுவரை வந்த லாபத்தில் நஷ்டம் ஏற்பட்டாலோ பக்கத்து வியாபாரியாக கருதப்படும் ஊழியரைக்குறித்து **பொறாமை** கொள்ள ஏதுவுண்டு. எனக்குதான் அந்த பிரச்சனையே இல்லையே?

நாலுமாவடிக்காரரைவிட சாய்பாபாவுக்கு கூட்டம் அதிகம், சபரி மலைக்கூட்டம், திருப்பதிக்கு கோடாகோடி கூட்டம், வேளாங்கண்ணிக்கு கூட்டம், பழனி மலைக்கு போகும் கூட்டம், இவர்களை நினைத்துதான் மோகன் சி.லாசரஸ் திறப்பின் வாசல் ஜெப குழுவோடு இணைந்து மேலே குறிப்பிட்டவர்களை சபித்து அந்த கோவில் தகர்ந்துபோகவேண்டும், தூள் தூளாக போகும் என்று ஜெபிக்கிறாரே அதுதான் பொறாமையின் ஜெபம் ஆகும். மற்றபடி **நாலுமாவடிக்கு** காணிக்கை அனுப்புவர்கள் எனக்கு காணிக்கை அனுப்புவதில்லை. நாலுமாவடிக்கு போகும் நபர்கள் என் கூட்டங்களுக்கு வருவதில்லை. பிறகு எனக்கு எதற்கு பொறாமை உண்டாகவேண்டும்?.

என் ஊழியம் எப்போதும் போல் கடந்த **51** வருடங்களாக ஒரே மாதிரி ஏற்றமும்- இறக்கமும் இல்லாமல் வெற்றிகரமாக, கடன் இல்லாமல் நடந்துக்கொண்டிருக்கும் போது நான் எந்த விதத்தில் இவர்களைப்பார்த்து பொறாமை படமுடியும். இவர்கள் கூட்டத்துக்கு போகிறவர்கள் வசனத்தை கேட்க போவதில்லை. சுகத்துக்காக, தங்கள் பெயர் ஜெபத்தில் அழைக்கப்படவேண்டும் என்று எதிர்ப்பார்த்து போகிற வசன தெளிவில்லாத கூட்டம் ஆகும்.

ஆனால் என் கூட்டத்துக்கு வருகிறவர் வேத வசனத்துக்கு இத்தனை ஆழமான அர்த்தம் உண்டா? இவ்வளவு நாள் எனக்கு தெரியாமல் போனதே என்று கூறி வசனத்தை கேட்க பல மைல் பிரயாணம்செய்து நேரில் என்னை சந்தித்து வசன விளக்கங்களை கேட்டு போக வரும் கூட்டம் தான் என்னைத் தேடிவரும். இப்படிப்பட்ட சிறு கூட்டத்தையே நான் விரும்புகிறேன்.

❖ அநேக ஆண்டுகளுக்குமுன் கேராளவில் **குருப்பம்பாடி** என்ற இடத்தில் மிகப்பெரிய கூட்டத்தில் பிரசங்கிக்க என்னையும்,**Dr.தியோடர் வில்லியம்ஸ்** அவர்களையும் அழைத்திருந்தார்கள். **Dr.தியோடர்வில்லியம்ஸ்** அவர்கள் வேதாகம கல்லூாரியில் எனக்கு ஆசிரியராக இருந்தவர். அவரின் வேத ஆழம் வேத ஞானம் மிக அற்புதமானாது.

ஆனால் அந்த கேரளா கன்வென்ஷனில் பகல் கூட்டத்தில் **Dr.**தியோடர்வில்லியம்ஸ் அவர்கள் பேசவேண்டும். இரவு பொது கூட்டத்தில் நான் பிரசங்கிக்கவேண்டும் என்று நோட்டீசில் அச்சடிக்கப்பட்டதை கண்டு அதிர்ந்துபோனேன். ஒருவேளை **Dr.தியோடர் வில்லியம்ஸ்** அவர்களின் வேத ஞானத்தையும் உலக பிரசித்திப்பெற்றவர் என்பதையும் கூட்டம் நடத்துபவர்கள் அறியாமல்போயிருப்பார்களோ என்று நினைத்தேன். அந்த கன்வென்ஷன் நடக்கும் இடத்துக்கு நான் போய் சேர்ந்தவுடன் கன்வென்ஷன் பொருப்பாளர்களை அழைத்து **Dr.தியோடர் வில்லியம்ஸ்** என்னைவிட உலக பிரசித்திப்பெற்ற வேத பண்டிதர். ஆட்கள் நிறைய கூடும் இரவு கூட்டத்தில் அவரை பேச வையுங்கள். நான் பகல் கூட்டத்தில் பேசுகிறேன். மேலும் அவர் என் **குரு, ஆசிரியர்** என்றும் கூறினேன். ஆனால் அவர்களோ இந்த எல்லா ஏற்பாட்டை **Dr.**தியோடர் வில்லியம்ஸ் அவர்கள்தான்

எங்களிடம் கூறி அறிவிக்க சொன்னார் என்றார்கள். அன்று இரவு கூட்டம் முடிந்தபின் நாங்கள் ஒரு டாக்டர் வீட்டில் இரவு உணவு சாப்பிட சென்ற போது **Dr.**தியோடர் வில்லியம்ஸ் அவர்கள் என்னிடம் கூறினார். என்ன டாக்டர் கூட்டம் நடத்துபவர்களிடம் தகராறு செய்தீர்களாம்!, உங்கள் நல்ல எண்ணம் எனக்கு விளங்குகிறது. நீங்கள் கொடுக்கும் மரியாதை எனக்கு புரிகிறது. ஆனால் உண்மை நிலவரம் என்னவென்றால் பொது ஜனங்களிடம் பிரசங்கம் செய்வதற்கான அட்ராக்ஷன் அல்லது கவர்ச்சி எனக்கு இல்லை. உங்களுக்கு கர்த்தர் அந்த தாலந்தை நிரம்ப கொடுத்திருக்கிறார். மேலும் கேரளா மக்கள் உங்கள் பிரசங்கத்தை கேட்க மிகவும் விரும்புகிறார்கள். ஆகவே இரவு பொது கூட்டத்தில் நீங்கள் பேசும்படியான ஏற்பாட்டை நான்தான் செய்தேன். எனக்கு 10 பேர் கூடினால் போதும், அவர்களுக்கு வேதபாடம் நடத்த சொன்னால் மிக ஆசையாக உற்சாகத்தோடு நடத்துவேன். அதுதான் எனக்கு ஏற்றது என்றார். அதைத்தான் நான் விரும்புகிறேன் என்றார்.

அன்று அவரின் பெருந்தன்மையை அறிந்து அவரின் அந்த தாழ்மையை என் ஊழியத்தில் ஒரு பாடமாக நான் என் மனதில் பதித்துக்கொண்டேன். அன்றுமுதல் பெரிய கூட்டத்தில்தான் பேசுவேன் சிறிய கூட்டம் அல்லது சிறு கிராமம்மானால் தேதி கொடுக்ககூடாது என்றோ சிறு கூட்டத்தில் நான் பேசமாட்டேன் என்ற சிந்தை என் உள்ளத்தில் உண்டாகமல், அப்படிப்பட்ட எண்ணம் எனக்குள் வராமல் பார்த்துக்கொள்ள **Dr.**தியோடர் அவர்களின் தாழ்மை, கூட்டத்துக்குவரும் மக்களைக்குறித்துள்ள அவரின் கணிப்பு இவைகள் எனக்கு நல்ல முன்மாதிரியாக அமைந்தது.

**Dr.தியோடர் வில்லியம்ஸ்** அவர்களுக்கு என் பிரசங்கத்தை கேட்க வரும் கூட்டத்தை அல்லது மக்களின் எதிர்பார்ப்பைக்குறித்து **பொறாமை** இவருக்கு இல்லை. மோகன் சி.லாசரஸ் அவர்கள் கூறுவதைப்போல் **பொறாமை** அவருக்கு இருக்குமானால் என்னை இரவு கூட்டத்தில் அத்தனை பெரிய கூட்டத்தில் நான் தான் பேசவேண்டும் என்று **Dr.**தியோடர் வில்லியம்ஸ் அவர்கள் கட்டாயப்படுத்தியிருப்பாரா?

நாலுமாவடி **மோகன். சி.லாசரஸ்** குறித்து பாண்டிசேரி ஊழியர் தம்பி.**சாம்சன் பால்** அவர்கள் எழுதியதைப்போல் இவர்கள் எல்லாம் தங்கள் தவறான உபதேசத்தை மறைக்க அவரின் **தவறை சுட்டிக்காட்டும் மற்ற ஊழியர்களை இவர்கள் பொறாமை** பிடித்தவர்கள் என்ற வார்த்தைகள் மூலம் தன்னையும், தன் **தவறுகளையும் மறைத்துக்கொள்கிறார்கள்** என்பது எத்தனை உண்மை!.

நல்ல வசன தெளியுள்ள மக்கள், உண்மையாக மனந்திரும்பி வேத வசனத்தை அறிய ஆசைப்படும் மக்கள், உண்மையாக ஜெபிக்கும் மக்கள் இப்படிப்பட்டவர்கள் **சகோ.சாம்சன் பால், டாக்டர்.புஷ்பராஜ், டாக்டர்.சாம்கமலேசன், டாக்டர்.தியோடர் வில்லியம்ஸ்** ஆகியவர்களை விரும்புகிறார்களே என்று உள்ளத்தின் ஆழத்தில் **மோகன் சி.லாசரஸ்க்கு** ஏற்பட்ட பாதிப்புதான்.

நாங்கள் **பொறாமை** பிடித்தவர்கள், குற்றம் சொல்லும் ஆவியை பெற்றவர்கள் என்று எங்களைப்பற்றி அவரை பிரசங்கிக்க வைத்தது. பாவம்! அவர் ஆத்துமாவுக்காக வாசகர்கள் ஜெபித்துக்கொள்ளுங்கள். இவர் **ஜெபத்தில் பொய் தீர்க்கதரிசனம், ஜெபத்தில் பெயர்களை பொய்யாய்** அறிவிப்பதிலிருந்து எப்படியாவது இவர் **மனந்திரும்பவேண்டும்** என்று அவருக்காக நாம் ஜெபிப்போம். ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## மகாத்மா காந்தி படம்:

**கேள்வி: மகாத்மா காந்தியின் படத்தை பீர் மதுபான டின்னில் அச்சடித்து காந்தி பீர் என்று அமெரிக்காவில் விற்றிருக்கிறார்களே, நம் பிரதமர் மோடி எந்த பதிலும், எதிர்ப்பும் கூறவில்லையே? இப்போதுள்ள BJP அரசாங்கமும் எந்த எதிப்பும் கூறவில்லையே ஏன்?.**

**பதில்:** பாரத தேசத்துக்கு தன்னுடைய வாழ்க்கையை, தான் படித்த **பார் அட் லா** என்ற வக்கீலின் உயர்ந்த படிப்பை **இந்திய நாட்டு சுதந்திரத்துக்காக** உதறிதள்ளி, அரண்மனைப் போன்ற தன் சொந்த மாளிகையில் வாழும் வாழ்க்கையையும் அவர் துறந்து... **தமிழ்நாட்டு கிராம மக்கள் மேலே வஸ்திரம்** இல்லாமல் **கோவணத்துடன்** வாழும் வாழ்க்கையை நேரில் கண்டபின் இந்திய கிராம மக்கள் அனைவருக்கும் உடுக்க வஸ்திரம் கிடைக்கும்வரை நான் ஷர்ட்,கோட்,பேண்ட் போன்ற எதையும் உடுத்தமாட்டேன் என்று தியாக எண்ணத்துடன் வாழ்ந்து இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்க சிறையில் அடிப்பட்டு, ஜெயில் வாசம் செய்து கொடுமைப்படுத்தபட்டு முடிவில் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து முழு இந்தியாவுக்கும் சுதந்திரத்தையும், குடியாட்சியையும் வாங்கி கொடுத்தாரே! அதற்கான நன்றி உணர்ச்சி இப்போது ஆளும் **BJPக்கோ,பிரதமர்.மோடிக்கோ** இருந்திருக்குமானால் அல்லது இவர்களுக்கு **இந்திய தேச பக்தி** உள்ளத்தில் இருக்குமானால், நம் பாரத தேச தந்தையான **மகாத்மா காந்தி** அவர்கள் மதுபானத்தை இந்தியாவிலிருந்து நீக்கி விடவேண்டும் என்றும், மக்களை மதுபான அடிமையிலிருந்து காக்கவேண்டும் என்றும் பாடுபட்ட அவரை அவமானப்படுத்தும் வகையில் மதுபான டின்னுக்கு **மகாத்மா காந்தி** படத்தை பிரசூரித்து **காந்தி பீர்** என்று எழுதி விற்ற அந்த கம்பெனிமேல் அல்லது அதற்கு அனுமதி கொடுத்த அமெரிக்கா நாட்டின்மேல் தன் கண்டனத்தை தெரிவிதிருக்க வேண்டாமா?.

இவர்களுக்கு **தேச பக்தி** என்ற சொல் அரசியல் வியாபாரத்தில் உபயோகப்படுத்தும் சொல் ஆகும், இவர்களுக்கு உண்மையான தேச பக்தியிருந்தால் அந்த **மகாத்மா காந்தியை** கொன்ற RSS இயக்க தலைவர்களில் ஒருவனான **கோட்சேக்கு கோவில் கட்ட** பூமி பூஜை போட்டு மகாத்மா அவர்களை அவன் சுட்டது நியாயம் தான் என்றும், அது இந்திய தேசத்துக்கு அவன் செய்த **தியாகம்** என்பதாக இவர்கள் உள்ளத்தில் நினைப்பது உறுதியானது. என்ன மனசாட்சி?.

இது கொலைக்காரனுக்கு ஒரு கோவில்? கேட்கவே கூச்சமாக இருக்கிறது!.

இதுதான் இன்றைய இந்தியாவில் **காவிப்படை ஆட்சியின்** நிலையாகும்.



Gandhi before assassination    Gandhi falling down after bullet fired

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## ஜாமக்காரன் வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு:

‘ **விலாசம் மாற்றம்** இருந்தாலோ அல்லது **பத்திரிக்கை வரவில்லை** என்றாலும் உடனே உங்களுடைய முழு விலாசத்தையும், உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் **கணணி எண்ணையும்**(COMPUTER NUMBER) குறிப்பிட்டு எனக்கு CAPITAL LETTERSல் எழுதுங்கள் உங்களுக்கு உடனே **ஜாமக்காரன்** பத்திரிக்கை அனுப்பிவைக்கப்படும்.

‘ உங்களுக்கு இரண்டு ஜாமக்காரன் பத்திரிக்கை வந்தாலும் உடனே எனக்கு தெரிவிக்க வேண்டுகிறேன். எங்களுடன் தொடர்புக்கொள்ளும் ஒவ்வொரு முறையும் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் கணணி எண்ணையும் குறிப்பிடவும்.

# இலங்கை சரித்திர சக்கரம் சுழன்றது:




உலகமே மிகவும் எதிர்ப்பார்த்த தேர்தல் **இலங்கை நாட்டு** தேர்தலாகும். அதுவும் **போர் குற்றவாளி** என்று வர்ணிக்கப்பட்ட **ராஜபக்ஷே** மறுபடியும் இலங்கை அதிபராவாரா? என்று நான் சென்றுவந்த அனைத்து நாட்டினராலும் ஆவலோடு கேட்கப்பட்ட கேள்வியாகும்.

நடந்துமுடிந்த தேர்தலில் அவரின் ராஜதந்திர முறை மிக ஆச்சரியமானது. மிக தைரியமானதுமாகும். இலங்கை சிங்களர்களின் ஆட்சியில் இருந்தாலும், இலங்கையில் தேர்தல் முடிவு இலங்கை வாழ் தமிழர்களின் கையில்தான் இருந்தது. ஆகவே இலங்கை தமிழர்களை குறிப்பாக தான்கொன்று குவித்த **யாழ்பாண**(Jaffna) தமிழர்களையே இவர் சுற்றிசுற்றி ஓட்டு சேகரிக்க ஓடினார்.

தேர்தலில் ஜெயித்த திரு.**மைத்திரிபாலா** அவர்களை மனதில்கொண்டு தமிழர்களை பார்த்து கூறியது என்ன தெரியுமா? நீங்கள் **அறியாத தேவதையைவிட, நீங்கள் அறிந்த பிசாசை நம்பலாம்** என்றாரே அதுதான் அவரின் உச்சக்கட்ட மேலும் உண்மையான தேர்தல் செய்தியாகும்.



தன்னை **ராஜபக்ஷே பிசாசு** என்று வர்ணித்துக்கொண்டது அது ஆங்கில பழமொழியாக இருந்தாலும் அதுதான் உண்மையும்கூட. இலங்கை தமிழர்களுக்கு **ராஜபக்ஷே** ஒரு **பிசாசாகத்தான்** அமைந்தார். அன்று உலகத்தின் முதல் பிசாசான லூசிபர் ஏதேன் தோட்டத்தை தும்சம் செய்ததைப்போல் இலங்கை தமிழர் பகுதிகளை குறிப்பாக **யாழ்பாண** தமிழர்களின் குடும்பங்களை தேடிதேடி கொன்று குவித்து பிசாசு தும்சம் செய்ததைப்போல் மனிதர்களை மனிதர்களாக பாராமல் ஈவு இரக்கமின்றி பந்தாடிவிட்டார். இத்தனை கொடூரங்களையும் செய்துவிட்டு அந்த தமிழர்களிடம் நேரில் சென்று ஓட்டு சேகரித்தார். இவரே தன் படங்களை மரம் உயர வரைந்து தமிழ் மாநிலம் முழுவதும் அலங்காரத்தோடு இவரை வரவேற்பதுபோல் பணத்தை தேர்தல் விளம்பரத்துக்காக அள்ளி தெளித்ததோடல்லாமல் அந்த தமிழர்களை நேரில் தனித்தனியாக சந்தித்து தயவுசெய்து **பழையதை எல்லாம்** மறந்துவிடுங்கள்!. உங்கள் தமிழ் மாநில முன்னேற்றத்துக்காக நான் பாடுபடுவேன். இப்போது நான் செய்த முன்னேற்றங்களை பாருங்கள். சாலைகள் செப்பனிட்டது, உங்கள் மறுவாழ்வுக்காக நான் செய்த உதவிகளை ஞாபகத்தில் வைத்து என்னை ஜெயிக்க உதவுங்கள் என்றபோது,......

அவர் உபயோகித்த வார்த்தையையே தலைப்பாக்கி **யாழ்பாண தமிழர்கள்** துண்டு பிரதி அச்சடித்து வெளியிட்டார்கள். அதில் எழுதப்பட்டதாவது: **எதை மறப்பது பிசாசே!, என் கணவனை, பிள்ளைகளை,பிறந்த குழந்தைகளையும் கொன்றதை மறக்கவா?கைகளை இழந்து,கண்களை இழந்து,கால்களை இழந்து,வாழ்க்கையையே முடமாக்கினீர்களே!அவைகளை மறக்கவா? தட்டிகேட்கவும் மனிதர்கள் இல்லாத மயானபூமியாக யாழ்பாணத்தை மாற்றி எங்கள் பெண்டினரை கற்பழித்து கெடுத்ததை மறக்கவா? எங்களுக்காக இந்தியா நாடு கட்டிக் கொடுத்த வீட்டில் சிங்களவர்களை குடியமர்த்தி எங்களை முள்வேலிக்குள் இன்னும் அடைத்து வைத்திருக்கிறீர்களே அவைகளை மறக்கவா? எதை மறக்க சொல்கிறீர்கள்?.**

தமிழர்களின் உள்ள குமுறலாக கொப்பளித்த மரண வேதனையுள்ள இந்த கேள்விகள் ராஜபக்ஷே அடிவயிற்றை கலக்கின? அப்போதே **தான்**தோல்வியடைவோம் என்பதை உணர்ந்து கொண்ட ராஜபக்ஷே தனக்கு விசுவாசமான ராணுவத் தலைவர்களில் சிலரை இரகசியமாக அழைத்து தேர்தலில் தோல்வியுற்றால் கூலிபடைகளை கொண்டு செயற்கையான கலவரத்தை கொளும்பு நகரில் உண்டாக்கி அதையே காரணம்காட்டி **ராணுவ ஆட்சியை** கொண்டுவந்து பாகிஸ்தானைப்போல் ராணுவ சர்வாதிகாரியாக சில காலம் நாட்டை ஆளலாம் என்று திட்டமிட்டதை இந்திய இரகசிய உளவாளிகள் இலங்கை எதிர்கட்சி தலைவர்களுக்கு செய்தியாக அறிவித்து இலங்கையில் ராணுவ ஆட்சிவராமல் தடுத்தார்கள்.

தோல்வி செய்தி கேட்டவுடனே ராஜபக்ஷே இலங்கையைவிட்டு ஓட நினைத்தார். இயலவில்லை. எதிர்கட்சியினர் மிக கவனத்துடன் **ராஜபக்ஷே** குடும்பத்தினரின் நடவடிக்கைகளை கவனித்து கொண்டிருந்ததால் திட்டம் தோல்வியுற்றது.

மேலும் தன் சிங்கள இனத்தினரால் தன் உயிருக்கு ஆபத்து நேரப்போகிறது என்பதை அறிந்து எதிர்கட்சியின் அதிபர் பதவி வேட்பாளருக்கும், பிரமதர் பதவி வேட்பாளருக்கும் செய்தி அனுப்பி தன் உயிருக்கு பாதுகாப்பு தருவதானால் அதிபர் மாளிகையிலிருந்து சொந்த வீட்டுக்கு எந்த பிரச்சனையும் உண்டாக்காமல் வெளியேறுவதாக வாக்களித்தார். அப்படியாக அவருக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டு அதே நாள் அதிகாலையிலேயே அதிபர் மாளிகையிலிருந்து சத்தமில்லாமல் வெளியேறினார்.

## யானை தன் கையாலேயே மண்ணை வாரி போட்டுக்கொண்டது:

ராஜபக்ஷே அவர்கள் அதிபர் **பதவி முடிய** இன்னும் **இரண்டு ஆண்டுகள்** இருக்கவே ஜோஸ்ஸியரை நம்பி, சூழ்நிலை தனக்கு சாதகமாக இருப்பதாக தப்பு கணக்கு போட்டு அவசரமாக தேர்தலை நடத்தினார். விளைவு! பெரும் தோல்வியையே அவர் தழுவினார். சிங்கள மக்களே பெரும்பகுதியினர் ராஜபக்ஷேக்கு எதிராக ஓட்டளித்தனர். காரணம், ராஜபக்ஷேவின் சகோதரர்கள் சொந்தங்கள் அனைவருக்கும் உயர்ந்த பதவிகளை அளித்து அரசு பணத்தை விரயமாக்கியதை கண்கூடாக கண்டதால் சிங்களர்களே ராஜபக்ஷேவை வெறுத்தார்கள். ராஜபக்ஷேக்கு எதிராக ஓட்டளித்தார்கள்.

## இலங்கை நாட்டின் ஆட்சி முறை:

இந்தியாவும்-இலங்கையும் ஒரே நாளில் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபட்டு சுதந்திரம் பெற்றது. ஆனால் ஆட்சிமுறையில் இலங்கை தலைவர்கள் தங்களுக்கென்று மாற்றம் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

இந்தியாவில் **ஜனாதிபதி** என்ற தலைமை பதவி ஒன்று இருந்தாலும் இந்திய **பிரதமருக்குத்தான்** எல்லா அதிகாரமும் இருக்கும். ஆனால் இலங்கையில் (அதிபர்)**ஜனாதிபதிக்கு** தான் அதிகாரம் முழுவதும் கொடுக்கப்பட்டுள்ளது. **பிரதமர்**, ஜனாதிபதிக்கு உதவியாக செயல்படுவார் அவ்வளவே!. இலங்கை **ஜனாதிபதி** மக்களால் நேரிடையாக தெரிந்தெடுக்கப்படுவார்.

இலங்கை 1947ம் ஆண்டில் இந்தியாவைப்போல் சுதந்திரம் பெற்றாலும் மக்களால் ஆளப்படும் குடியரசு நாடாக 1972ம் ஆண்டுதான் அறிவிக்கப்பட்டது. 1978ம் ஆண்டில்தான் (ஜனாதிபதி) அதிபர் ஆட்சி முறை அறிமுகப்படுத்தபட்டது. முதல் அதிபர் தேர்தல் 1982ம் ஆண்டுதான் நடைப்பெற்றது. அதுவரை பிரதமர்தான் அதிகாரம் உள்ளவராக இருந்தார்.

இலங்கை அரசியலமைப்பு சட்டப்படி ஒருவர் **இரண்டுமுறை மட்டுமே** ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடலாம். ஆனால் ராஜபக்ஷே பதவிக்கு வந்தபின் சட்டத்தை மாற்றினார். அரசியலமைப்பு சட்டம் 18வது சட்டப்பிரிவைத்திருத்தி மூன்றாவது முறையாக போட்டியிட்டார். இந்த புதிய சட்டத்திருத்தம் இவருடைய பதவிக்கே உலை வைத்தது. எதிர்ப்பார்த்தப்படி அவர் ஜெயிக்க முடியவில்லை.

முதல்முறை அதிபராக பதவி ஏற்றதும் விடுதலைப் புலிகளோடு உள்நாட்டு யுத்தம் செய்ய தீவிரம் காட்டினார். அதன் முடிவாக 2009ம் ஆண்டில் வெற்றியும் பெற்றார். அதையே பெரும் வெற்றியாக காட்டி 2010ல் உடனே தேர்தலை நடத்தி வெற்றியும் பெற்றார். ஆனால் மூன்றாவது முறையும் அதே வழியில் பதவி காலம் முடியும் முன்பாக தேர்தல் நடத்தி பெரும் வெற்றி பெறுவோம் என்று பெரிய அளவில் நம்பினார். ஆனால் அது இத்தனை பெரிய தோல்வியை உண்டாக்கும் என்றோ, தன் வாழ்க்கையையே தலைகீழாக மாற்றி போடும் என்றோ ராஜபக்ஷே அவர்கள் கற்பனையிலும் சிந்திக்கவில்லை.

இந்த முறை ராஜபக்ஷே தோற்றதற்கு முக்கிய காரணங்கள் திரு.**மைத்திரி பாலா சிறிசேனா** அவர்களை அதிபர் வேட்பாளராக அறிவித்து அவரை முன் முன்நிறுத்தி அனைத்து எதிர்கட்சிகளும் ஒன்றாக இணைந்து செயல்பட்டன. **ரனில் விக்கிரமசிங்கே,சரத்பொன்சேகா,விஜய குமாரதுங்கா** போன்றவர்கள் அனைவரும் ஒன்றாக கூட்டாக இணைந்து மைத்திரி அவர்களை ஆதரித்தனர். கடந்த 9 வருடங்களாக அரசியலைவிட்டு விலகியிருந்த **சந்திரிகாவும்** எதிர்கட்சிகளுடன் இணைந்து **மைத்திரியை** ஆதரித்தார்.

# இலங்கையில் தமிழர்களின் எதிர்ப்பு:

இலங்கையில் மலையில் வாழும் தேயிலை தோட்டத்தில் வேலை செய்யும் இந்திய வம்சாவழி தமிழர்களும்,யாழ்பாண தமிழர்களும் ஒட்டுமொத்தமாக **ராஜபக்ஷேயை** எதிர்த்து ஓட்டுபோட்டனர்.

தமிழர்களின் நிலங்களை நிரந்தரமாக கையகப்படுத்த முயன்றது. தமிழர் வாழும் பகுதியை முழுவதையும் ராணுவ கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து வைத்தது. கல்வி,வேலைவாய்ப்பில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டது. **தமிழ்நாடு** என்று தனியாக இருக்கக்கூடாது என்று தமிழர் பகுதிகளில் சிங்களர்களை குடியேற்றியது, **வடக்கு மாகாண தமிழ்**அரசுக்கு உரிய அதிகாரங்களை தர மறுத்தது. ஆகியவைகளை தமிழர்களை கூடுதல் வெறுப்படைய செய்தன.

அதோடு சிங்கள தீவிரவாதிகள் முஸ்லீம்களை அடிக்கடி தாக்கி துன்புறுத்தியதை ராஜபக்ஷே தடுக்வில்லை. ஆகவே அனைத்து **முஸ்லீம்களும்** ராஜபக்ஷேக்கு எதிராக ஓட்டளித்தனர். சிங்கள புத்த பிட்சுக்கள் கிறிஸ்தவ ஆலயங்களை சுமார் 200 ஆலயங்களை தாக்கியது. கிறிஸ்தவர்கள் அனைவரும் ராஜபக்ஷேக்கு எதிராக ஓட்டளித்து தோற்கடித்தனர்.

இலங்கையில் கூடுதல் செல்வாக்கை பெற்ற சிங்கள புத்தபிட்சுகளின் **ஜாதிக ஹேல உருமய** என்ற கட்சியும், ராஜபக்ஷேயை இம்முறை வெறுத்து ஒதுக்கியது **மைத்திரி** அவர்கள் ஜெயிக்க காரணமாக அமைந்தது. மேலும் தமிழ்நாட்டைப்போல் ராஜபக்ஷேவின் குடும்பங்கள் அனைத்துக்கும் பெரும் பதவிகள் அளிக்கப்பட்டது. அவர்களின் பலரின் அட்டகாசம் சிங்களருக்கு வெறுப்பை உண்டாக்கி ராஜபக்கேஷவை ஒதுக்கியது. இப்படியாக **ராஜபக்ஷே** என்ற பயங்கர சர்வாதிகாரி அதிபர் பதவியிலிருந்து திரும்ப வரமுடியாத அளவு தோல்வியடைந்து இலங்கை சரித்திரத்தின் **கருப்பு புள்ளியாக** சரித்திரத்தில் இடம்பெற்றார். அவர்கள் அத்தியாயம் ஒருவழியாக முடிவு பெற்றது.

## தமிழர்களின் சந்தேகம்:

ராஜபக்கேஷவை தோற்கடித்ததில் தமிழர்கள் சந்தோஷப்பட்டாலும், புதிய அதிபராக பொருப்பேற்றிருக்கும் **மைத்திரிபாலா** அவர்கள் தேர்தல் சமயத்தில் கூறியது: தமிழருக்கு சந்தேகத்தை உண்டாக்கியது. **நான் ஜெயித்தாலும் வடக்கு தமிழகத்தில் உள்ள ராணுவத்தை ஒருகாலும் விலக்கி கொள்ளமாட்டேன்** என்ற வார்த்தை தமிழர்களுக்கு **சந்தேகத்தை** ஏற்படுத்தியுள்ளது. புதிய அதிபரும் ராஜபக்ஷே வழியில்தான் செல்வாரோ என்ற பயத்தை தமிழர் உள்ளத்தில் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை தமிழர்கள் இப்போது புதிய அதிபரிடமிருந்து எதிர்ப்பார்ப்து என்னவென்றால், **ராஜபக்கேஷ** மேலும் அவரை சார்ந்துள்ளவர்களின்மேலும்உள்ள **போர் குற்ற விசாரணையை** நேர்மையாக விசாரிக்கவேண்டும். தமிழர்களை மீண்டும் அவர்களுடைய பகுதிகளில் குடியமர்த்த வேண்டும். தமிழர்களின் விவசாய நிலங்களை அவர்களுக்கே திருப்பி தரவேண்டும். **தமிழர்களும், சிங்களர்களும்,முஸ்லீம்களும்** சமரசமாக வாழ தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க வேண்டும்.

அப்படியே மலையக தமிழர்களுக்கு இலங்கை குடியுரிமை அவர்களின் வாழ்க்கையில் நிம்மதியையும் வளமான வாழ்க்கையும் ஏற்படுத்தி தரவேண்டும். மலையக தமிழர்களின் இந்த கோரிக்கை மிக நீண்ட காலமாக கோரிக்கையாகும். எந்த அரசு பொறுப்பேற்றாலும் இவர்கள் கோரிக்கையை கண்டுகொள்ளாமல் புறக்கணித்தனர். புதிய அதிபரின் ஆட்சியிலாவது மலையக தமிழர்களுக்கு ஒரு விமோச்சனம் கிடைக்கட்டும்.

புதிய இலங்கை அதிபர்.திரு.**மைத்திரிபாலா சிறிசேனா** அவர்களுக்கு புதிய ஆட்சியாளர்களுக்கும் ஜாமக்காரன் சார்பில் வாழ்த்து கூறுகிறேன்.

இலங்கை மக்கள் அனைவரும் கர்த்தராகிய **இயேசுகிறிஸ்துவை** அறியவேண்டும். புத்த பிட்சுக்கள் தங்கள் முக்கிய கொள்கையான அன்பு என்பதை செயலில் காட்ட வேண்டும். ஜெபிப்போம்.

## சர்வாதிகாரி ராஜபக்ஷே

ஒரு நாட்டின் தலைமை பொருப்புள்ள ஒருவருக்கு தேர்தலில் அரிதி பெரும்பான்மை கிடைத்து எதிர்கட்சியே இல்லாமல்போனால் அந்த நபர்தான் சர்வாதிகாரியாக **ஹிட்லரைப்போல்,முசோலினி** போல் மாறுவார்கள். அப்படித்தான் அதிபர் ராஜபக்ஷே மாறினார்.

எந்த நாட்டுக்கும் சுப்ரீம் கோர்ட் தான் கடைசியும் சர்வ அதிகாரமும் சட்ட முடிவு அறிவிக்கும் அதிகாரம் இருக்க வேண்டும். நீதிபதிகள் ஆளும்கட்சியின் பிரதமாராலோ, ஜனாதிபதியாலோ இயங்கக் கூடாது. பிரதமர்,ஜனாதிபதிகளின் கட்டளை நீதிபதிகளை கட்டுப்படுத்தக்கூடாது. அப்படி கட்டுப்படுத்தினால் நீதிபதிகள் சுதந்திரமாக, தைரியமாக நீதியான தீர்ப்பு அளிக்க முடியாது.

அதிபர்.**ராஜபக்ஷேக்கு** அந்த ஒழுங்கு பிடிக்கவில்லை. தான் கூறுவதுபோல் தலைமை நீதிபதியாக இருந்த **ஷிரானி பண்டாரநாயக்** தீர்ப்பளிக்கவில்லை என்பதால் கோபமுற்றி ஊழல் குற்றசாட்டு கூறவைத்து தலைமை நீதிபதி பதவியைவிட்டு நீக்கிவிட்டு, தனக்கு சாதகமாக தீர்ப்பளிக்கும் நீதிபதி **மோகன் பெரீஸ்** அவர்களை பதவியில் அமர்த்தினார். அப்போது யாரும் அதை எதிர்த்து கேள்விகேட்க முடியவில்லை. இதெல்லாம் **சர்வாதிகாரி** என்ற திமிர் ஆகும்.

**ராஜபக்ஷே** அதிபர் பதவியிலிருந்து தோற்றுபோய் பதவி விலகியவுடன் இலங்கையில் உள்ள அனைத்து வக்கீல்களும் ராஜபக்கேஷவால் நியமிக்கப்பட்ட நீதிபதி.மோகன் பெரீஸ் அவர்களை பதவி விலகவேண்டும் என்று நூற்றுக்கணக்கான வக்கீல்கள் கடந்த மாதம் இலங்கை கொழும்பில் கூடி போராட்டத்திலும், ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

# அதேபோல் இந்தியாவிலும் நிகழலாம்:

நீதிபதிகளை நியமிக்கும் அதிகார கமிட்டி **நீதிபதிகளுக்குள்ளேயே** தெரிந்தெடுக்கப்பட்டு இதுநாள்வரை இயங்கி வந்ததால் ஓரளவு மக்களுக்கு நியாயம் கிடைத்தது. மக்களுக்கு இருக்கும் கடைசி நம்பிக்கை **சுப்ரீம் கோர்ட்**(உச்ச நீதிமன்றம்)தான். நீதிபதிகள்மேல் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கை இழந்துப்போனால் இந்தியாவில் ஊழல் பெருகிவிடும். குற்றவாளி சகல சாட்சிகளும் சரியாக இருந்தாலும், அரசியல்வாதிகள் சிபாரிசுகளால் நீதி கிடைக்காமல் போகும். அப்படித்தான் ராஜபக்ஷேவின் சர்வாதிகாரத்தால் நீதிமன்றத்துக்கு மதிப்பில்லாமல் போனாது.



அதுபோல் இந்தியாவிலும் நடக்க நிறைய வாய்ப்புகள் உண்டு. நீதிபதிகள் குழுவே நீதிபதிகளை தெரிந்தெடுக்கும் முறை **BJP அரசில்** நீக்கப்பட்டது. இனி அரசியல்வாதிகள் மனது வைத்தால் பணபெட்டிகளுக்கு மயங்கி அரசியல்வாதிகளுக்கு பயந்து குற்றவாளிக்கு சாதமாக தீர்ப்பளிக்கப்படும்.

‘ தமிழ்நாட்டு முதல் மந்திரி.**ஜெயலலிதா** அவர்களுக்கும் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டும் அதை சுப்ரீம் கோர்ட் மீண்டும் விசாரணைக்கு உத்தரவு கொடுத்து எந்த கண்டிஷனும் இல்லாத ஜாமீன் ஜெயலலிதாவுக்கு வழங்கியது. அப்போது கர்நாடக கோர்டில் 3 முறை நீதிபதிகள் மாற்றப்பட்டார்கள். ஒரு நீதிபதி வேலையைவிட்டே கட்டாய ஓய்வுப்பெற்றார். அரசாங்க வக்கீல் குற்வாளிக்கு சாதகமாக மாறிப்போனார். பெட்டிகள் பேசியிருக்கும். நியாயமான நீதிபதி என்று பெயர் பெற்றவர் கூட நீதி பிரள, வழக்கை ஒன்றுமில்லாமல் ஆக்கக்கூடும் என்று கர்நாடாகவில் பேசிக்கொள்கிறார்கள்.

நீதிமன்றம் தனித்து இயங்காமல்போனால் நியாயம் சாகும். நீதி சாகும். குற்றவாளிகள் விடுவிக்கப்படுவார்கள். அதன்பின் இந்தியாவை யாரும் காப்பாற்ற முடியாது.

இப்போதே அதற்கு அடையாளமாக BJPயின் உள்துறை அமைச்சர் **ஒரு குற்றவாளி** என்று தீர்ப்பளிக்கப்பட்டவரை பயபக்தியோடு தமிழ்நாடு வந்து பேசி போகிறார் என்றால் இவர் பின்னால் நிச்சயம் **பிரதமர்.மோடி** அவர்கள் இருப்பார் என்று மக்கள் சந்தேகப்படுகின்றனர்.

## ஆலோசனை- ஜெபத்துக்கு தொடர்புக்கொள்பவர்கள் கவனிக்கவும்:

**ஒவ்வொரு மாதத்திலும்** வாரத்தில் **செவ்வாய்கிழமை** முதல் **புதன் மதியம் வரை** மட்டுமே நான் வீட்டில் **சேலத்தில் இருப்பேன்**.

ஆலோசனைக்கும்-ஜெபத்துக்கும் நேரில் **சேலம்** (தமிழ்நாட்டுக்கு) வர விரும்புகிறவர்கள், முன்பதாகவே நீங்கள் என்னை சந்திக்க விரும்பும் தேதிகளை கடிதத்தில் குறிப்பிட்டு எழுதி கேட்டு எங்களிடமிருந்து பதில் பெற்றப்பின் அல்லது போனில் தொடர்புகொண்டு சந்திக்கும் நாளை உறுதிப்படுத்திக்கொண்டு வரவும்.

தொலைப்பேசியில் ஆலோசனை பெறுகிறவர்கள் வேதவசன சந்தேகம் கேட்கிறவர்கள், ஜெப குறிப்புகளை பகிர்ந்துக்கொள்கிறவர்கள் காலை 8மணியிலிருந்து இரவு 11மணிவரை தொடர்புக் கொள்ளலாம்.

**(தினசரி** மதியம் 2 மணியிலிருந்து மாலை 5மணிவரை போனில் தொடர்புக்கொள்ள முயலவேண்டாம்.) குறிப்பிட்ட அந்த நேரம் நேரில் வருபவர்களுக்காக ஜெபிக்கும்நேரமாகும். மேலும் அது **நாங்கள் ஓய்வு** எடுக்கும் நேரமுமாகும்.

அந்த **3மணி நேரம் எங்கள் தொலைபேசியை ஆப் செய்து வைத்து விடுவோம்** என்பதை நீங்கள் அறிய விரும்புகிறேன்.

‘ வடஇந்திய ஊழியங்களுக்கு நான் சென்றால் **செவ்வாய்கிழமையில்** வீட்டில் இருக்கமாட்டேன் என்பதையும் அறியவும்.

செய்திகள்! செய்திகள்!!







# ரூ.5 லட்சம் லஞ்சம் வாங்கிய கர்நாடக நீதிபதி கைது:

கர்நாடக மாநிலம் **பீதர்** மாவட்ட சிவில் நீதிமன்ற நீதிபதி **சரவணப்பா சஜ்ஜன்,** வழக்கொன்றில் ஒருவருக்கு சாதகமாக நடந்துக்கொள்வதற்காக ரூ.5லட்சம் லஞ்சம் வாங்கியதால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக கர்நாடக உயர்நீதிமன்ற நீதித்துறை பதிவாளர் பி.ஏ.பாட்டில் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பீதர் மாவட்டத்தில் உள்ள பசவகல்யாண் சிவில் நீதிமன்றத்தில் சரவணப்பா சஜ்ஜன் மூத்த நீதிபதியாக பொறுப்பு வகிக்கிறார். இவர் கடந்த செவ்வாய்கிழமை வழக்கு தொடர்பாக சம்பந்தப்பட்டவரிடம் ரூ.5லட்சம் பெற்றுள்ளார்.

லஞ்சம் பெறும்போது கர்நாடக உயர்நீதிமன்ற லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் அவரை கையும் களவுமாக பிடித்துள்ளார். தனது குற்றத்தை நீதிபதி.சரவணப்பா சஜ்ஜன் ஒப்புக்கொண்டுள்ளார். அவர் காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டார். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிகாலை 4 மணிக்கு லஞ்சம்:

நீதிபதி.சரவணப்பா சஜ்ஜன் மீது லஞ்ச புகார் அளித்த காசிநாத் என்பவர் கூறியதாவது:

பீதர் மாவட்டம் ஹீல்சூரில் உள்ள ஸ்ரீகுருபசவேஷ்வரா கல்வி அறக்கட்டளைக்கு 1995ம் ஆண்டு தலைவராக தேர்ந்தெடுக்கபட்டேன். எனது பதவி காலம் முடிவதற்குள் ஸ்ரீ பசவேஷ்வரா மடத்தை சேர்ந்தவர்கள் என்னை அப்பதவியில் இருந்து வெளியேற்றினர். இதனால் எனக்கு ரூ.20 லட்சம் நஷ்டம் ஏற்பட்டது.

இந்நிலையில் எனது பதவி காலம் முடிவதற்குள் வெளியேற்றியதால் ஏற்பட்ட ரூ.20 லட்சம் நஷ்டத்தை திருப்பி தருமாறு கேட்டேன். அதற்கு ஸ்ரீபசவேஷ்வரா கல்வி அறக்கட்டளை நிர்வாகிகள் என்னிடம் ரூ.30 லட்ச ரூபாயை வட்டியுடன் செலுத்துமாறு மிரட்டினர். இது தொடர்பாக கடந்த 2000வது ஆண்டில் வழக்கு தொடர்ந்தேன்.

கடந்த 14 ஆண்டுகளாக தீர்ப்பு வெளியாகவில்லை. விரைவில் தீர்ப்பு வழங்க வேண்டுமானால் ரூ.5லட்சம் தருமாறு நீதிபதி சரவணப்பா சஜ்ஜன் லஞ்சம் கேட்டார். இது குறித்து கர்நாடக உயர்நீதி மன்ற லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தேன்.

அதனைத் தொடர்ந்து நீதிபதி சரவணப்பா சஜ்ஜன் கூறியவாறு கடந்த செவ்வாய்கிழமை அதிகாலை 4 மணியளவில் பீதர் பசவண்ணா சிலைக்கு அருகே சென்றேன். அங்கு காத்திருந்த நீதிபதி சரவணப்பா என்னிடம் ரூ.5 லட்சம் லஞ்சமாக பெற்றார். லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள்,அவரை சம்பவ இடத்திலே கைது செய்தனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

-**இந்து நாளிதழ்**-பெங்களூரு.

# மனிதனின் புலம்பலும் தேவனின் ஆறுதல் வார்த்தைகளும்

*மனிதன்* : என்னை **நேசிப்பார்** யாருமில்லை

**தேவன்** : எரேமி 31:3-அநாதி சிநேகத்தால்(நான்) உன்னைச் சிநேகித்தேன்.

*மனிதன்* : எனக்கு பயமாக உள்ளது

**தேவன்** : 2 தீமோ 1:7ல் பயமுள்ள ஆவியைக் தேவன் நமக்கு கொடுக்கவில்லை.

*மனிதன்* : என்ன செய்வதென்றே தெரியவில்லை

**தேவன்** : பிலி 4:13 - என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எதையும் செய்யமுடியும்.

*மனிதன்* : **கவலைகளால் சோர்ந்து போனேன்** என்ன செய்வது?

**தேவன்** : 1 பேது 5:7- அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால்(கவலைகளை அவர்மேல் வைத்துவிடலாம்.

*மனிதன்* : எனக்கு **உதவுபவர்கள்** யார்?

**தேவன்** : சங் 50:15 - ஆபத்துக் காலத்தில்(இயேசுவை) என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன் என்று கூறியிருக்கிறார்.

*மனிதன்* : **இது என்னால் இயலாதது**

**தேவன்** : லூாக் 18:27- மனுஷரால் கூடாதவைகள் **தேவனால் கூடும்**

*மனிதன்* : நான் **சோர்ந்து போயிருக்கிறேன்**

**தேவன்** : மத் 11:28- நான் உங்களுக்கு **இளைப்பாறுதல் தருவேன்** என்று இயேசு கூறுகிறார்

*மனிதன்* : என்னால் **முன்னேறவே முடியவில்லையே**

**தேவன்** : 2 கொரி 12:9- **என் கிருபை உனக்குப் போதும்** என்று கர்த்தர் கூறுகிறார்

*மனிதன்* : என் **தேவைகளை நிறைவு** செய்யமுடியவில்லையே

**தேவன்** : பிலி 4:19- என் தேவன் **தம்முடைய ஐசுவரியத்தின்படி** உங்கள் **குறைவையெல்லாம்** கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.

*மனிதன்* : நான் **ஒரு அனாதையைப்போல்** வாழ்கிறேன்

**தேவன்** : சங் 27:10 - என் தகப்பனும், என் தாயும் **என்னைக் கைவிட்டாலும்** கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார்.

*மனிதன்* : நான் **மதியற்றவன்** என்று பிறர் ஏளனம் செய்கிறார்கள்

**தேவன்** : 2 நாளாகமம் 1:12- **ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கனத்தையும்** உனக்குத் தருவேன் என்று கர்த்தர் கூறுகிறார்.

*மனிதன்* : நான் ஒரு பாவி **எனக்கு மன்னிப்பு கிடைக்குமா?**

**தேவன்** : 1யோவான் 1:9- **பாவங்களை நமக்கு மன்னித்து** எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு **அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்** என்று வேதம் கூறுகிறது.

*மனிதன்* : **மரண பயம்** என்னை கலக்குகிறது

**தேவன்** : யோவான் 11:25- நானே உயிர்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை **விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்** என்று இயேசுகிறிஸ்து கூறியுள்ளார்-

**- தொகுப்பு : ஜார்ஜ் மனாசா**

# (MUMBAI) THANA MEETINGS

## THANA ANGLICAN CHURCH OF INDIA-
## CHURCH DAY CONVENTION







மஹாராஷ்ட்ராவில் தானா என்ற இடத்தில்(சுபாஷ் நகர்) ஆங்கிலிக்கன் சபையின் 48வது சபை தின கன்வென்ஷன் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

**Rev.JEREMIAH AMOS** அவர்கள் மிக சிறப்பாக ஜெபத்துடன் கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தார். கர்த்தரின் நாமம் மகிமைப்பட்டது. சபையின் பெயர் நம்பிக்கையின் ஆலயம் என்பதாகும்.

**Rev.James Simoni(ACI), Rev.G.Lalji Vedah(ACI), Rev.R.R.Jayasingh (Nazarene Church), Rev.Ramesh kasab(ACI)** இவர்களோடு இன்னும் பல இடங்களிலிருந்து ஆயர்களும், ஊழியர்களும் திரளாக இக்கூட்டங்களில் பங்குக்கொண்டு தேவசீர்வாதம் பெற்றனர். கூட்டங்களில் கர்த்ததருடைய நாமம் மகிமைப்பட்டது.

# தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் கெஸ்விக் முகாம் 2015







தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள **கோவில்பட்டி** என்ற இடத்தில் நடைபெற்ற **42**வது **கெஸ்விக் முகாம்** சிறப்பாக நடைபெற்றது. இதில் நானும்,சகோ.குரூஸ் திவாகரன் அவர்களும் செய்தி அளித்தோம். அனைத்து சபைகளும் சேர்ந்து நடத்துகிற விசேஷ ஆவிக்குரிய கூட்டம். இந்தியாவில் இரண்டு இடத்தில்மட்டும் கெஸ்விக் கன்வென்ஷன் என்ற பெயரில் மிகப்பெரிய கூட்டமாக இது நடத்தப்படுகிறது. ஒன்று **திருவல்லா**(கேரளா),மற்றொன்று **கோவில்பட்டி**(தமிழ்நாடு). Rev.V.T.ஜான் (மதுரை)அவர்களும், Rev.P.பிரபாகர்(மதுரை) அவர்களும் கர்த்தருடைய செய்தியை பகிர்ந்து கொண்டார்கள். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

# கிழக்கு கேரளா CSI திருமண்டலத்தில் உள்ள MELUGAVU MUTTAM கன்வென்ஷன்







கிழக்கு கேரளாவில் Prof.JACOB அவர்கள் மிஷனரி ஸ்தாபனத்தின் ஸ்தாபகர், வயது முதிர்ந்தோர் இல்லம் போன்ற நற்பணிகளை செய்பவர். அவர் மரணத்துக்குபிறகு நடந்த இந்த கன்வென்ஷன் **தொடுபுழா** அருகில் **முட்டம்** என்ற இடத்தில் மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. Rev.P.V.Joseph அவர்கள் பொருப்பெடுத்து நடத்திய இந்த கன்வென்ஷன் ஆசீர்வாதமாக அமைந்தது.

# கன்னியாகுமரி CSI திருமண்டலத்தில் உள்ள போறம்கோடு கன்வென்ஷன்



கன்னியாகுமரி CSI திருமண்டலத்தில் உள்ள **போறம்கோடு** ஆலயத்தில் 125வது ஆண்டுவிழா நன்றி கூறும் வகையில் நடந்த இந்த கன்வென்ஷனை கன்னியாகுமரி டையோசிஸ் பிஷப்பும், முன்னாள் மாடரேட்டருமான Most Rev. தேவகடாட்சம் அவர்கள் பிரதிஷ்டை விழா ஆராதனை நடத்தினார். 3 நாட்களும் நான் கர்த்தருடைய செய்திகளை பகிர்ந்துகொண்டேன். Rev.Beebin,MA.,BD., அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார். இக்கூட்டம் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

# மத்திய கேரளா CSI திருமண்டலத்தில் உள்ள ஆர்ப்புகார கன்வென்ஷன்



இங்கு நடந்த கன்வென்ஷன் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தன. Rev.Raju Mathew அவர்கள் மிகவும் ஜெப ஆயத்தத்துடன் இக்கூட்ட ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார். கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

செய்திகள்! செய்திகள்!!




## RSS தலைவர்கள் படித்த கிறிஸ்தவ பள்ளி-கல்லூரிகள்:

**அத்வானி** படித்தது - செயின்ட் பேட்ரிக்ஸ் ஹைஸ்கூல்
**அருண் ஜெட்லி** படித்தது - செயின்ட் சேவியர் ஸ்கூல்
**ஸ்மிருதி இரானி** படித்தது - ஹோலி சைல்டு ஆக்ஸிலியம் ஸ்கூல்
**சுப்ரமணியசுவாமி** படித்தது - ஹார்வர்ட் பல்கலைக்கழகம்,கேம்பிரிட்ஜ்
**துக்ளக் சோ** படித்தது - லயோலா கல்லூரி

**வாஜ்பாய்** முதல் இப்போதுள்ள RSS,BJP,VHP,பஜ்ரங்தள் இயக்கத்தில் உள்ள பெரும்பான்மையானவர்கள் அனைவரும் நல்ல படிப்புக்கும், சன்மார்க்கம்,ஒழுங்கு இவைகளை கிறிஸ்தவ பள்ளிக்கூடம்தான் எனக்கு போதித்தது என்று கூறியவர்களாகும்.

**காங்கிரஸ்ஸில்** மகாத்மா **காந்தி, நேரு, இந்திரா காந்தி,ராஜீவ் காந்தி,சஞ்ஜய் காந்தி,பிரியங்கா காந்தி, பிரியங்கா கணவர் ராபர்ட்** ஆகிய பெரும்பான்மை காங்கிரஸ்காரர்கள் எல்லாரும் கிறிஸ்தவ பள்ளிகளிலும், கிறிஸ்தவ கல்லூரிகளிலும் படித்தவர்களே.

முன்னாள் தமிழக முதல்வர் **ஜெ.ஜெயலலிதா** சிறுவயதிலிருந்தே கிறிஸ்தவ கான்வென்டில் தங்கியும், கிறிஸ்தவ கான்வென்டிலும் படித்தவராகும்.

' ஆனால் **அகில பாரத இந்து மகா சபை** தன் துண்டு பிரசூரத்தில் இந்துக்களே கிறிஸ்தவ பள்ளிகளை புறக்கணியுங்கள். உங்கள் பிள்ளைகளை கிறிஸ்தவ பள்ளிக்கூடத்தில் சேர்க்கமாட்டோம் என்று தீர்மானம் எடுங்கள் என்று அதில் எழுதி அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள்.(2014 டிசம் 24)

## மரண அறிவிப்பு:



நீண்டகால ஜாமக்காரன் வாசகரும், சேலம் CSI உயர்நிலைப்பள்ளி ஆசிரியருமாய் பணியாற்றி ஓயப்வுபெற்ற திரு.வி.**ஜான்சன்,**MA,BT.,அவர்கள் தனது 77ம் வயதில் 2014 டிசம்பர் மாதம் கர்த்தருக்குள் நித்தியடைந்தார். இவர் கேரளாவில் திருவல்லா என்ற ஊரை சொந்த ஊராக கொண்டவர்.

ஆனால் நீண்ட காலத்துக்கு முன்பே கேரளாவிலிருந்து தமிழ்நாட்டுக்கு குடிபெயர்ந்து மருத்துவ தொழில் புரிந்த, மரித்த **Dr.P.Varkey** அவர்களின் மகனான திரு.ஜான்சன் அவர்கள் தமிழ்நாட்டிலேயே படித்து தமிழ்நாட்டிலேயே கல்லூரியில் படித்து பட்டம் பெற்று, தமிழ்நாட்டில் சேலத்திலேயே ஆசிரியர் பணி செய்து மரித்தவராகும்.

இவருக்கு மனைவி, மகன்,மகள்,பேரப்பிள்ளைகள் உண்டு. இவர்களின் ஆறுதலுக்காக ஜெபிப்போம். **மார்தோமா சபை** அங்கத்தினரான இவர் அன்றைய காலங்களில் மார்தோமா சபை அன்று சேலத்தில் இல்லாததால் ஆரம்ப முதல் CSI சபை அங்கத்தினராகவே சபையில் சேர்ந்து ஆராதித்து வாழ்ந்து மரித்தார்.

# புது வருட சிந்தனைக்கு:

பிரச 7 : 14 வாழ்வு காலத்தில் நன்மையை அநுபவித்திரு:
தாழ்வு காலத்தில் சிந்தனை செய்:
மனுஷன் தனக்குப்பின் வருவதொன்றையும்
கண்டுபிடியாதபடிக்குத் தேவன் இவ்விரண்டையும்
ஒன்றுக்கொன்று எதிரிடையாக வைத்திருக்கிறார்.

நீதி 22:19 உன் நம்பிக்கை கர்த்தர்மேல் இருக்கும்படி,
இன்றைய தினம் அவைகளை உனக்குத் தெரியப்படுத்துகிறேன்.

உபா 11:12 வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவுமட்டும்
எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள்
(உன்)அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும்

FEBRUARY 2015

Printed Book/Book Post

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at Priya Pathipagam,197.LIC Colony, Salem-636 004
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.